பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

## வீசக் கொடுத்த இறைச்சியை விற்பனை செய்த ஊழியர்

வீசுவதற்குக் கொடுக்கப்பட்ட பழுதடைந்த இறைச்சியை திருநெல்வேலி சந்தையில் விற்பனை செய்த நான்கு சுகாதாரத் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படவுள்ளனர். யாழ் நகரப் பகுதியில் கடமையாற்றும் இந் நான்கு சுகாதாரத் தொழிலாளர்கள் கழிவுகளை ஏற்றிக் கொண்டு வரும்போது வீசுமாறு கொடுக்கப்பட்ட பழுதடைந்த இறைச்சியை இவர்கள் பெற்றுச்சென்றனர். கழிவுகள் வீசப்படும் பொம்மை வெளிப் பகுதிக்குச் சென்ற அவர்கள் அங்கு கழிவுப் பொருள்களை வீசிவிட்டு பழுதடைந்த இறைச்சியை வீசாமல் எடுத்துச் சென்று திருநெல்வேலிச் சந்தையில் வைத்து விற்பனை செய்துள்ளனர். ஆனால் அவ் இறைச்சியை வாங்கியவர்கள் இறைச்சி

[6 ஆம் பக்கம் பார்க்க]

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | வைகாசி 25 | 08 - 06 - 94 | புதன்கிழமை | ஓசை 110

# காரைநகர் கடற்படைத் தளத்தினுள் புலிகளின் கண்ணியில் சிக்கிய 'பவுசர்' சிதறியது

## ஒரு சிப்பாய் பலி; ஒருவர் காயம்

**காரைநகர் கடற்படைத் தளத்தினுள் விடுதலைப் புலிகள் வைத்த கண்ணிவெடியில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான தண்ணீர் பவுசர் சிக்கிச் சிதறியது. இதில் பயணம் செய்த ஒரு கடற்படைச் சிப்பாய் கொல்லப்பட்டார், ஒருவர் காயமடைந்தார்.**

இது குறித்து சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தகவல் தருகையில்; இக் கண்ணிவெடிச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றதாக அவர் தெரிவித்தார் இச் சம்பவத்தில் ஒரு கடற்படைச் சிப்பாய் பலியானதாகவும், ஒருவர் காயமடைந்ததாகவும் குறிப்பிட்ட அவர் கடற்படைத் தளத்தில் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிமீது தண்ணீர் பவுசர் ஒன்று ஏறியபோது அது வெடித்ததாகத் தெரிவித்நார்.

இதே சமயம் காரைநகர் தீவுப்பகுதி முழுவதும் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் வேளையில் விடுதலைப் புலிகளின் கண்ணிவெடி கடற் படைத் தளத்தினுள் வெடித்தது பாதுகாப்பு வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இன்றும் நாளையும் படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளை வியாழக்கிழமையும் நடைபெறும் எனவும் அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

## அலெக் ரொபட்சன் ராஜினாமா

(கொழும்பு)

ஐ. தே. க மற்றுமொரு தேசியப்பட்டியல் அவிசாவளை தொகுதி எம். பியான அலெக் ரொபட்சன் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதி விஜேதுங்காவிடம் நேற்று சமர்ப்பித்தார்.

ஐ. தே. கவை பலப்படுத்தும் நோக்கில் இந்த நல்லெண்ண நடவடிக்கை மேற்

## ஆனையிறவு, பூநகரிக்கு புதிய பொறுப்பதிகாரி

(கொழும்பு)

ஆனையிறவு மற்றும் பூநகரி இராணுவ தளங்களுக்கு பொறுப்பாக புதிய இராணுவ அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவ புலனாய்வு பிரிவின் தலைவராகப் பணியாற்றிய பிரிகேடியர் தமுனுகல வவுனியா இராணுவ இணைப்பதிகாரியாகவும், வவுனியா இராணுவ இணைப்பதிகாரியாக கடமையாற்றிய பிரிகேடியர் பற்றிக் பெர்னாண்டோ ஆனையிறவு -வெற்றிலைக்கேணி முகாம்களுக்கும் பூநகரி

## கரையோரப் பகுதி மீது

# யுத்தப் பகுதி செல்லாதவர் பாதுகாப்பிற்கு பொறுப்பு

## டி. பி. குறித்து 'சண்டே ஐலண்ட்' சாடல்

(கொழும்பு)

பாதுகாப்பிற்கு பொறுப்பான அமைச்சராகவும் உள்ள ஜனாதிபதி விஜேதுங்கா ஒரு போதும் யுத்தம் நடைபெறும் பகுதிகளுக்குச் சென்று கள நிலைமைகளை அவதானிப்பதில்லை. தனது அமைச்சர்களையே அவர் படை முன்னணி அரங்குகளுக்கு அனுப்பிவிட்டு இருக்கின்றார். இவ்வாறு சண்டே ஐலண்ட் பத்திரிகையில் வெளியாகியுள்ள செய்திக் கட்டுரை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாதுகாப்புக்கு என பொறுப்பாக ஒரு சிவில் அமைச்சர் ஜனநாயக நாடு ஒன்றில் கட்டாயமாக இருக்கவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக சிறிலங்கா அரசில் இத்தகையதோர் அமைச்சர் இல்லை. வளைகுடா வில் அமெரிக்கப் படைகள் போரில் ஈடுபட்டிருந்தவேளை ஜனாதிபதி புஷ் நேரில் தனது படைகளைச் சென்று சந்தித்தார். இதனால் அப் படையினரின் மனவுறுதியும் அதிகரித்தது. நாடும் ஜனாதிபதியும் தமக்கு பின்னால் நிற்பதாக அப் படையினர் பூரித்தனர். ஆனால் எமது நாட்டைப் பொறுத்தவரையில் இப்படியாக ஜனாதிபதி விஜயம் செய்யவேண்டுமானால் அவரது சொந்தப் பாதுகாப்பிற்கே பெருமளவு படையினரும் ஹெலிகப்டர்களும் தேவையாக உள்ள ஓர் அவல நிலை காணப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவத்துக்கு பதிலடி வழங்கி புலிகள் பலத்தின்மேல் பலம் பெற்றனர்

(கொழும்பு)

கடந்த சில வருடங்களாக அரசு எடுக்கும் சிறப்பான இராணுவ நடவடிக்கைகளுக்கு விடுதலைப்புலிகளும் சமமாக பதில் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். இதன் மூலம் புலிகள் பலத்தின்மேல் பலம் பெற்று வளர்ந்து வருகின்றனர் வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு அல்லாத நடவடிக்கைகளை எடுப்பது குறித்து இன்னமும் பரிசீலிக்கப்படவில்லை இரண்டு தசாப்தங்களாக நடைபெற்று வரும் கிளர்ச்சி எமக்கு பல பாடங்களை கற்றுத்தந்துள்ளது. இவ்வாறு சண்டே ஐலண்டில் அக்னி என்பவர் எழுதியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழர்கள் மீதான அணுகு முறை குறித்து அரசின் போக்கில் மாறுதல் ஏற்படவேண்டும். விடுதலைப்புலிகளின் கடந்த 10 வருட நடவடிக்கைகளை மூன்று பகுதிகளாக பிரிக்க முடியும் முதல் பகுதியில்

(6ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தலில் தோல்வியை விரும்பும் ஐ. தே. க. போட்டிக்குழுக்கள்

(கொழும்பு)

ஐ. தே. கவிற்குள் இன்று ... கும் என இவர்கள் நம்புவதாகவும் கூறப்படுகிறது. ... யின் கை கட்சியில் ஓங்கும் இதனால் ரணிலின் பிரதமர்

# ஐ. தே. க. போட்டிக்குழுக்கள்

(கொழும்பு)

ஐ. தே. கவிற்குள் இன்று உருவாகியுள்ள காமினி, ரணில், கூரே, பிரேமதாசா அணிகளிடையே ஏற்பட்டுள்ள இழுபறி கட்சியை பலவீனப் படுத்தும் நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது தேர்தலில் கட்சி வெற்றிபெறுவதை விட தோல்வியுறுவதை கட்சியில் பின்னர் தமது கையை பலப்படுத்த உதவுவதாக இருக்கும் என இவர்கள் நம்புவதாகவும் கூறப்படுகிறது.

அண்மையில் இது தொடர்பாக ஆலோசனை கேட்க பிரதமர் ரணில் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவிடம் சென்றபோது பொறுத்திருக்கும்படி ஜே. ஆர். கூறியதாக தெரிவிக்கப்படுகிறது ஜனாதிபதி வேட்பாளராக ஐ. தே. கவில் டி.பி.விஜேதுங்காவே நியமிக்கப்பட்டிருப்பதால் காமினியின் கை கட்சியில் ஓங்கும் இதனால் ரணிலின் பிரதமர் பதவிக்கு ஆபத்து வரலாம் என ரணில் தரப்பில் அஞ்சப்படுகிறது இந்த அச்சத்தை ஜே. ஆரிடம் ரணில் கூறியபோது வருவதை ஏற்றுக் கொள்ளவும் காமினியை உங்களால் தாக்குப் பிடிக்க முடியாது என ஜே. ஆர். கூறியதாக கட்சி வட்டாரங்களில் கூறப்படுகிறது.

# புளொட்டின் ஆயுதங்களைப்

# பாதுகாப்பு அமைச்சு முடிவு

(கொழும்பு)

வவுனியா மாவட்டத்திலுள்ள புளொட் குழுவினரின் ஆயுதங்களை கோருவதென பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தலைக்கவசம், வாகன அனுமதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன இல்லாமல் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த ஒருவர் வவுனியா பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டார் புளொட் குழு உறுப்பினரான இவர் தடுத்து வைக்கப்பட்ட செய்தியறிந்து அவ்விடத்திற்கு விரைந்து வந்த அவரது சகாக்கள் பொலிசாருடன் வாக்குவாதப்பட்டனர். இரு தரப்பினரும் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகமும் செய்தனர். இத்தருணத்தில் அவ் இடத்திற்கு வருகை தந்த உயர் பொலிஸ் அதிகாரிகள் சமரசம் ஏற்படுத்தினர். பின்னர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ஈபிஆர்எல்எவ். அலுவலகம் படையினரால் முற்றுகை

### ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

திருகோணமலை நகரில் அமைந்துள்ள ஈ. பி. ஆர். எல். எவ் காரியாலயத்தின் பின்புறத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள், வெடிகுண்டுகளை சிறிலங்கா இராணுவத்தினர் கண்டு பிடித்து கைப்பற்றியுள்ளனர்.

அதிசக்தி வாய்ந்த ஏழு குண்டுகள் மற்றும் ஆயிரத்து ஐந்து ரவைகள் மற்றும் தன்னியக்க துப்பாக்கிகள் என்பனவே கண்டுபிடிக்கப்பட்டவை எனவும் இவற்றை வைத்திருப்பது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கோ அன்றி பாதுகாப்பு ஒருங்கமைப்பு அலுவலகத்திற்கோ தெரியாது எனவும் கூறப்படுகிறது

இதனைத் தொடர்ந்து மேற்படி காரியாலயம் சுற்றி வளைக்கப்பட்டதாகவும் மேலதிக விசாரணை நடைபெறுவதாகவும் தெரியவருகின்றது.

## ரெலோ புளொட் குழுக்கள் வவுனியாவில் மோதல்

(கொழும்பு)

வவுனியாவில் புளொட் குழுவினருக்கும் ரெலோ குழுவினருக்கும் இடையில் லொறிக்காரர்களிடம் கப்பம் வாங்குவது தொடர்பாக முறுகல் ஏற்பட்டுள்ளது. பணத்தை லொறிக்காரர்களிடம் ரெலோ குழு வாங்குவதை நிறுத்தவேண்டும் எனவும் அதையும் மீறி வாங்கினால் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் புளொட் குழு எச்சரித்துள்ளது.

அண்மையில் வவுனியாப் பொலிசாரால் ரெலோ குழுவினால் பதுக்கி வைக்கப்

(6ஆம் பக்கம் பார்க்க)

ஜனாதிபதி விஜேதுங்காவிடம் நேற்று சமர்ப்பித்தார்.

ஐ. தே. கவை பலப்படுத்தும் நோக்கில் இந்த நல்லெண்ண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக ஜனாதிபதி விஜேதுங்கா கூறினார். அலெக் ரொபட்சன் கட்சி நலனை கருத்திற்கொண்டு தமது பதவியை இராஜினாமா செய்ததாகவும் ஜனாதிபதி கூறினார்.

முன்னதாக அலெக

(6ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் நோயாளருக்கு

(குருநகர்

நாளை 9ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு செல்வதற்குத் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும் இரண்டு நாட்களுக்கு தேவையான உணவு, தண்ணீருடன் நாளை மதியம் 12 மணியளவில் யாழ். பொது வைத்தியசாலைக்கு வருமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார். (21)

## கலந்துரையாடல்

வடமராட்சி கிழக்கு வட்டத்திற்குட்பட்ட அனைத்து கடல் தொழிலாளர் சங்க நிர்வாகத்தினர், ச. ச. நிலைய நிர்வாகத்தினர், விளையாட்டுக் கழகங்கள். கிராம முன்னேற்ற சங்கத்தினர், மாதர் சங்கம் ஆகியோருக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 10ஆம் திகதி அன்று பிற்பகல் 3.00 மணிக்கு நாகர்கோவில் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என கடற்புலிகள் அரசியற் துறைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கூட்டம் பிற்போடப்பட்டது

இன்று நடைபெறவிருந்த யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தின் பொதுச் சபைக் கூட்டம் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது என யாழ். மாவட்ட தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் அறிவித்துள்ளது.

கத் தெரிவித்தார்.

இதே சமயம் காரைநகர்

அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். இராணுவ புலனாய்வு பிரிவின் தலை

கடமையாற்றிய பிரிகேடியர் பற்றிக் பெர்னாண்டோ ஆனையிறவு -வெற்றிலைக்கேணி முகாம்களுக்கும் பூநகரி இராணுவ முகாமிற்குமான செயலணிக் கமாண்டராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## கரையோரப் பகுதி மீது பீரங்கித் தாக்குதல்

[தொல்புரம்]

சுழிபுரம் பகுதி கடற்பரப்பில் ரோந்து சுற்றி வந்த சிறிலங்கா கடற்படையினர் தமது பீரங்கிப் படகுகளில் ஒன்றான ‘ வீரயா சூரயா’’ பீரங்கிப் படகிலிருந்து நேற்று மாலை 3.10 மணியளவில் மேற்படி பகுதிகளின் கடற்பரப்புக்களை நோக்கி பலத்த பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதே தினம் இரவு 6.45 மணியளவிலும், நேற்று முன்தினம் இரவு 8 45 மணியளவிலும் காரைநகர் இராணுவ- கடற்படை கூட்டு முகாம்களிலிருந்து சுழிபுரம், மூளாய், பொன்னாலைப் பகுதிகளை நோக்கி பலத்த எறிகணை வீச்சினை சிறிலங்கா ஆயுதப் படையினர் மேற்கொண்டனர். இச் சம்பவத்தில் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை எனத் தெரியவருகிறது. (41)

### யாழ். கல்வி திணைக்களவலயம் - 2

## இருநேர பாடசாலை; கருத்து பெறப்படுகிறது

(யாழப்பாணம்)

யாழ். கல்வி வலயம் இரண்டில் இயங்கும் பாடசாலைகளின் கல்வி நேரத்தில் மாற்றங்களை மேற்கொள்வது குறித்து பெற்றோரின் அபிப்பிராயங்களைத் திரட்டிக் கொள்ளும் முயற்சியில் பல பாடசாலைகள் தீவிரம் காட்டி வருகின்றன.

கல்வி வலயம் இரண்டின் கீழ் இயங்கும் பல பாடசாலைகள் இரண்டு நேரமாக இயங்கி வருவது தெரிந்ததே. இவ்வாறு இரு நேரப் பாடசாலைகளை இன்றைய சூழ்நிலையில் நடத்துவது குறித்து பெற்றோர் தமது அபிப்பிராயங்களை தெரிவிப்பதற்கு வசதியாக பாடசாலைகள் சில படிவங்களை அச்சிட்டு விநியோகித்து வருகின்றன.

பாடசாலை அதிபர்களால் பெற்றோரிடமிருந்து திரட்டப்படும் அபிப்பிராயங்கள் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. இவ்வாறு கோட்டரீதியாக பெறப்படும் அபிப்பிராயங்கள் வலயம் இரண்டின் கல்விப் பணிப்பாளரிடம் சமர்ப்பிக்

(6ஆம் பக்கம் பார்க்க)

## ‘றாக்கிங்’ எனும் பெயரால் மோசமான துன்புறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புகுமுக மாணவர்கள் மீதான ‘றாக்கிங்’ மிக மோசமாக நடைபெற்று வருவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுளது.

தற்போது புதிய மாணவர்களுக்கென யாழ் குடாநாட்டில் யாழ். இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, இராமநாதன் கல்லூரி உட்பட வடமராட்சி மற்றும் தென்மராட்சி பாடசாலைகளில் முன்னோடி ஆங்கில பயிற்சி வகுப்புக நடைபெற்றுவருவது தெரிந்ததே.

இப்பயிற்சிக்கு செல்லும் மாணவர்கள் திரும்பி வரும் வரை காத்திருக்கும் யாழ. பல்கலைக்கழக மாணவர்கள் இவர்களை தமது தங்குமிடங்களுக்கு அழைத்துச் சென்று மிக மோசமான முறையில் துன்புறுத்துவதாக தெரிவிக்கப்படுகிறது.

(6ஆம் பக்கம் பார்க்க)

## சங்கீத, நடன ஆசிரியர் போட்டிப் பரீட்சை விரைவில்

[கொழும்பு]

அரசாங்கபாடசாலைகளுக்கான சங்கீத, நடன ஆசிரியர்களை நியமிப்பதற்காக ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை மிக விரைவில் நடாத்தப்படவுளது.

இப் பரீட்சைக்கான பாடத்திட்டம் தற்போது வெளியிடப்பட்டிருக்கிறது. மூன்று வினாத்தாள்களைக்கொண்ட மேற்படி பரீட்சைக்கான பாடத்திட்டம் பின்வருமாறு அமைந்துளது.

உளச்சார்புவினாப்பத்திரம் 1 மணித்தியாலம். அழகியற் கல்வி ஆசிரியர் என்ற முறையில் அலுவலக வேலையை மேற்கொள்ளும் பொழுது இருக்க வேண்டிய திறமையும் தகுதியும் கவனிக்கக் கூடிய தான முறையில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

பொது அறிவு வினாப்பத்திரம் - 45 நிமிடம். அழகியற் கல்வி ஆசிரியரிடம் இருக்க வேண்டிய பாடசாலை, அழகியற் கல்வியும் பொதுக் கல்வி

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**சலனம்**

உலக சினிமா தரம் பற்றிய விமர்சன சஞ்சிகை. எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8471)

**சாரதா**

கலை இலக்கிய சஞ்சிகை. அடுத்த இதழ் கோமல் சுவாமிநாதன் பேட்டியுடன் இலங்கைச் சிறப்பிதழ். எல்லாக் கடைகளிலும் விற்பனையாகிறது. (8472)

**துளிர்**

தமிழ் நாடு, புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மாணவர்களுக்கு அதிக பயன்தரக் கூடியது. (8474)

**அதிர்ஷ்ட சீட்டிழுப்பு முடிவு**

அளவெட்டி விநாயகர் வி. கழகம் நடாத்திய உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட அதிர்ஷ்ட இலக்கங்கள்; 4081 3681, 3676 அதிர்ஷ்டசாலிகள் செயலாளரிடம் தொடர்பு கொள்ளவும். விநாயகர் வி. கழகம். (8498)

**துளிர்**

ஏப்ரல், மார்ச் இதழ்கள் விற்பனையாகிறது எல்லாக் கடைகளிலும் கிடைக்கும் (8473)

**சமூக மாற்றத்திற்கான அரங்கு**

ஈழத்தமிழரிடையே சமூக மாற்றத்திற்கான வன்மையான அரங்கினை வளர்ப்பது பற்றிய ஒரு நாடக ஆக்கவியல் ஆய்வு- ஆசிரியர் க சிதம்பரநாதன். (8470)

**போட்டிப் பரீட்சை**

அரசாங்க சேவைகளுக்கான பரீட்சைக்கு முழுமையான பயிற்சியும் Spoken English with Grammar உம் கற்பிக்கப்படுகின்றது. நேரங்கள் வேண்டியபடி தரப்படும். விரிவுரைகள் V. N. Kandasamy, 87, திருநெல்வேலி றோட்,


### அளவை உபகரணம் முத்திரையிடல்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகப் பிரதேச வர்த்தகர்களுக்குரிய நிறுக்கும் கருவிகளான தராசு படிகளுக்கு 1994 ஆம் ஆண்டிற்கான முத்திரையிடப்படவுள்ளன.

மேற்படி நிறுவைகள், அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடல் இந்த மாதம் 09,10,13,14,16,17ஆம் திகதிகளில் காலை 8.30மணி முதல் பிற்பகல் 2.30மணி வரை சுழிபுரம் உப அலுவலகத்தில் இடம் பெறவுள்ளதென வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு.க.திரவியம் தெரிவித்துள்ளார்.

(41)

# மாணவர்களின் அணிவகுப்புடன் மருதங்கேணியில் எழுச்சி நாள்

மருதங்கேணி கல்விக் கோட்டத்தில் தமிழீழ மாணவர் எழுச்சி நாள் கடந்த ஞாயிற்றுக்கிழமை செம்பியன்பற்று றோ. க. த. பாடசாலையில் இருந்து சகல மாணவர்களுடைய அணி வகுப்புக்களுடன் ஆரம்பமாகியது இவ் ஊர்வலம் செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையைச் சென்றடைந்து அங்கு மாணவர் எழுச்சி நாள் கூட்டம் இடம்பெற்றது. இக் கூட்டத்திற்கு மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வ. செல்வராஜா அவர்கள் தலைமை வகித்தார். ஈகச்சுடரை யாழ். மாவட்ட கடற்புலிகளின் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் தேனமுதனும் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. ம. மணிமகனும் ஏற்றிவைத்தனர். தேசியக்கொடியை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் (கடற்புலிகளின்) திரு. ஜேந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து மருதங்கேணிக் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ராஜலிங்கம் அவர்கள் கல்விக் கோட்ட கொடியை ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து கடற்புலிகளின் கொடியை யாழ். மாவட்ட மகளிர் அமைப்பு அரசியல் பொறுப்பாளர் (கடற்புலிகளின்) செல்வி சுகி அவர்கள் ஏற்றிவைத்தார். தொடர்ந்து இரண்டு நிமிட மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது. இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கடற்புலிகளின் மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் திரு. செ. வைத்தி அவர்களும் தமிழீழ கடற்புலிகள் அரசியல் பொறுப்பாளர் தமிழ்மாறன் (மூர்த்தி) அவர்களும் உரை நிகழ்த்தினர். இதனைத் தொடர்ந்து தமிழ்த்தின விழாவில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வின் போது ஆயிரக்கணக்கான மாணவர்கள் கலந்து கொண்டார்கள்.

## குடிநீர் விநியோகத்திற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நீர் விநியோகத் திட்டத்தினை விஸ்தரிக்கவென வடக்கு-கிழக்கு மாகாண சபையினால் 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இது இவ் வருடத்திற்கான நிதி ஒதுக்கீடு என யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந் நிதியினைக் கொண்டு நீர் விநியோகத்திற்குத் தேவையான பொருள்களை கொழும்பில் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகதெரியவருகின்றது.

இந் நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாண நகர்ப்புறப்பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினையான இடங்களில் நிலவுகின்ற குடி நீர்த் தட்டுப்பாட்டை ஓரளவு பூர்த்தி செய்ய முடியுமென எதிர்பார்க்கப்படுகிறது. (பா)

## சதாசிவம் அமைச்சராவதை 27 உறுப்பினர்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

மத்திய மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சரான எஸ். சதாசிவத்திற்கு மீண்டும் அப்பதவி வழங்கப்படுவதற்கு மத்திய மாகாண சபையின் 27 உறுப்பினர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இவ்வாறு எதிர்ப்புதெரிவித்து இருப்போரில் எட்டுப்பேர் தமிழர்கள் ஆவர்.

ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கும் இ. தொ. கா. தலைவர் தொண்டமானுக்கும் இடையே முறுகல் நிலை ஏற்பட்டிருந்த போது மத்திய மாகாணசபையின் முன்னாள் கல்வி அமைச்சர் பதவி இழந்தது தெரிந்ததே காமினி தலைமையிலானஜ.ஐ.தே.மு.வினர் ஐ.தே கவில் மீண்டும் இணைந்து கொண்டுள்ளமை இத்தகைய முடிவை எடுப்பதற்கு வாய்ப்பாகி இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர்கள் அனைவரும் தமது ஆட்சேபனையை எழுத்து மூலம் முதலமைச்சருக்கு தெரியப்படுத்தியுள்ளனர்.

### தேர்தல் செயலர் அலுவலகம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் நடவடிக்கைகளை கண்காணிக்க சுதந்திரக்கட்சி தலைமையகத்தில் தேர்தல் செயலர் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

### முகைதீன் பதவி ஏற்பு

(கொழும்பு)

சிறிலங்காப் பாராளுமன்றம் நேற்றுக் காலை கூடிய போது சட்டத்தரணி யூ.எல்.

## துறைமுக வேலைநிறுத்தம் வட. கப்பல் சேவை பாதிப்பு

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தப் போராட்டம் ஒன்றில் குதித்துள்ளமையால் வடபகுதிக்குரியகப்பல்மூலமான அத்தியாவசிய பொருள்களின் விநியோகத்தில் தாமதம் ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த வேலை நிறுத்தம் காரணமாக கொழும்புத் துறைமுகத்தின் வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

பொருள்கள் ஏற்றப்பட்ட நிலையில் சுமார் 19 சரக்குக் கப்பல்கள் துறைமுகத்துக்கு உள்ளே தரித்து நிற்கின்றன. இதைவிட மேலும் 17 சரக்குக் கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரமிட்டிருக்கின்றன.

இவ்வாறுதரித்துநிற்கும் கப்பல்களால் பொருள்களை ஏற்றும் வேலைகளும் நடக்கவில்லை இறக்கும் வேலைகளும் நடக்கவில்லையென்று கொழும்பில்இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

துறைமுகத் தொழிலாளர் ஒருவரிற்கு சிகிச்சை அளிக்கும் போது கைவிரல் வெட்டுவது சம்பந்தமான விவகாரமே இந்த வேலை நிறுத்தத்துக்குக்காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த வேலை நிறுத்தம் காரணமாக வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக மேற்படி துறைமுகத்தில் தரித்து நிற்கும் கப்பலிலும் பொருள்கள் ஏற்றும் பணி தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் வடபகுதிக்கான சரக்கு கப்பல்களின் போக்குவரத்து சில காலம் தாமதமடையும் நிலை உருவாகியுள்ளது. (க)

### சிறுவர் நூலகம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபை நூலகப் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் சிறுவர்களுக்கான பகுதி விரிவாக்கப்படவுள்ளது.

இச் சிறுவர்களுக்கான பகுதியை இனி தனியாக செய்ற்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இதற்கென தனியான கட்டடப்பகுதி ஒன்றும் அமைக்கப்படவுள்ளதாக யாழ் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.


## நினைவு கூருகின்றோம்...

## 08.06.1994

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் கிளிநொச்சி, முறிகண்டி, முரசுமோட்டை, உருத்திரபுரம், கணேசபுரம், திருநகர் பகுதிகளில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல்களில் சொல்லப்பட்ட 25 தமிழர்கள்.

1987ஆம் ஆண்டு யாழ் - கட்டுவனில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். விஜி** (- வில்லியம் - வவுனியா)

யாழ் - கீரிமலையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**குமரன்** (கிட்னர் ஆனந்தவடிவேல் - கோண்டாவில் வீதி, கோப்பாய் - யாழ்.)

மட்டுநகரில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 07 தமிழர்கள்.

தையிட்டியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டு, எரிக்கப்பட்ட 11 தமிழர்கள்

1988ஆம் ஆண்டு யாழ் - புத்தூர்ப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட திடீர்த் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**தாமு** (கணபதி இரத்தினம் - புத்தூர் கிழக்கு, புத்தூர் - யாழ்.)

1991ஆம் ஆண்டு மட்டு - வந்தாறுமூலைப் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அம்பலத்தடிப் பகுதியைச் சுற்றி வளைத்து மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட களுவங்கேணி 2ஐச் சேர்ந்த பெண், களுவங்கேணி 1ஐச் சேர்ந்த கடற் தொழிலாளியான இளைஞன், வந்தாறுமூலையைச் சேர்ந்த 03 இளைஞர்கள், வந்தாறுமூலை பிரதான வீதியைச் சேர்ந்த விவசாயியான இளைஞன், இதே இடத்தைச் சேர்ந்த ஆசிரியர் உட்பட 07 தமிழர்கள்.

1992ஆம் ஆண்டு மணலாறு குமுழமுனைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் ஜெயகரன்** (இராஜலிங்கம் நவராஜ் - கற்குடா வீதி - மட்டு)

**காதாம்பரி** (திரேசமலர் வில்பிரட் - பழையபூங்கா வீதி, சுண்டுக்குளி - யாழ்.)

மணலாறு - தங்கபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் நேசன்** (தியாகலிங்கம் மோகன்பாபு - 5-ம் கட்டை, அலம்பில் - மணலாறு)

மணலாறு - காட்டுப்பகுதியில் சிறிலங்கா விமானப்படையினரின் விமானக் குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய,

**குயில்மொழி** (ரசிதா வேலுப்பிள்ளை - பெரியமடு, நெடுங்கேணி - மணலாறு)

**சந்திரமதி** (புஸ்பராணி அரியராசா - முள்ளியவளை - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில்

நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9616)


செயன்முறைப்

தென்மராட்சி கிழக்கு

31-ம்நாள் நினைவலைகள்

வுரைகள் V. N. Kandasamy, 87, திருநெல்வேலி றோட், றயில் கடவைக்குச் சமீபமாக கொக்குவில். [8504]

## புதிய நிவாரண முத்திரை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

இடம் பெயர்ந்தோருக்கான புதிய நிவாரண முத்திரைகள் தற்போது அந்தந்த பிரதேச செயலர் பிரிவுகளின் ஊடாக கிராமசேவை அலுவலர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன.

13ஏ, 13பீ, 14ஏ, 14பீ, 15ஏ, 15பீ ஆகிய ஆறு புள்ளிகளை உள்ளடக்கிய இப் புதிய முத்திரைகள் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் உள்ளோருக்கு அந்தந்த முகாம்களில் கொண்டு சென்று விநியோகிக்கப்படுகின்றன. (22)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

விஞ்ஞான பீடம்

கணனி விஞ்ஞானத்தை ஒரு பாடமாகக் கற்க விரும்பும் 1993/94 கல்வியாண்டிற்குரிய முதலாம் வருட மாணவர்களுக்கு 1994.06.10 இல் நடைபெறுவதாக இருந்த உளச்சார்புப் பரீட்சை 1994.06.17 ஆம் திகதி 9.00 மணிக்குப் பிற்போடப்பட்டுள்ளது.

- பதிவாளர்

(சி-9619)


## செயன்முறைப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

1993ஆம் ஆண்டிற்கான க. பொ. த. (சா/தர, செயன்முறைப் பரீட்சை தற்சமயம் யாழ். மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இப் பரீட்சைகள் யாவும் எதிர்வரும் 15ஆம் திகதியுடன் முடிவடையும் என யாழ். கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும் இப்பரீட்சை யாழ். மாவட்டத்தில் சுமார் பத்து பரீட்சை நிலையங்களில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன [பா]

றம் நேற்றுக் காலை கூடிய போது சட்டத்தரணி யூ.எல். எப். முகைதீன் பாராளுமன்ற உறுப்பினராக சபாநாயகர் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார் இவர் முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான அஷ்ரப்பின் பதவி துறப்பையடுத்து அவரது இடத்திற்கு நியமனம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஐ. தே.க. தேசியப் பட்டியல் மூலம் நியமனம் பெற்ற ஆர். டி. சிறிசேன நேற்று தமது பதவியைத் துறப்பதாக தெரிவித்து பிரியாவிடை உரை நிகழ்த்தினார்.


## அங்குரார்ப்பணக் கூட்டம்

மாரீசன்கூடல் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் 10-6-94 வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு அந்தோனியார் முகாம்-3 மானிப்பாயில் ஒன்றியத் தலைவர் தலைமையில் நடைபெற இருப்பதால் மாரீசன்கூடல் கடற்றொழிலாளர் அபிவிருத்தி அமைப்பு அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

நன்றி.

சு. எட்வேட் சவுந்தரம்
அமைப்பாளர்.

(8501)

## கொழும்பு ஸ்ருடியோ

தொழில்நுட்பத்தில் 35வருட அனுபவம் வாய்ந்தவர்கள்
தரமான

- ★ Line, Half tone and Colour Blocks
- ★ றபர் சீல் Rubber Stamps
- ★ சில்க் ஸ்கிறின் Silk Screen
- ★ Re-copy பழைய படங்களில் இருந்து புகைப் படங்களைப் பெரிதாக்க

எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்
குறைந்த செலவில் குறுகிய காலத்தில்
தரமாகப் பெற்றுக்கொள்க.

கொழும்பு ஸ்ருடியோ

55, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9617)

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்-
கொடிகாமம்

## பதவி வெற்றிடம்

காசாளர் - தரம் 306 (15) பழைய
தரம் 306 (13) புதிய

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது. விண்ணப்பம் 27-6-94ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும். விண்ணப்பிப்போர் பொது முகாமையாளர், தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கம், கொடிகாமம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். தகுதியுடைய பணியாளர்கள் விரும்பின் நேரில் ஒப்படைக்கலாம். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் காசாளர் பதவியெனக் குறிப்பிடப்பட வேண்டும். பணியாளருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சம்பளம்;- 730 - 20×15 - 25×5 - 1055
படிகள் மாதம் - 1474

**தகைமைகள்:-**

**வயது:-** 27-6-94ஆம் திகதி 20 வயதிற்கு குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயுமிருத்தல் வேண்டும்.

**கல்வி:-** கூட்டுறவு பணியாளரின் 14வது பழைய, புதிய 15வது சம்பளத்தில் கடமையாற்றிய 2 வருட அனுபவம்.

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) பத்திரம்/ க.பொ.த (சாதாரண) தரத்தில் 2 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/வர்த்தக கணிதம்/ தூய கணிதம் தமிழ்ப்பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 06 பாடங்களிலான சித்தியும் காசாளராக/ வியாபார நடவடிக்கைகளில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவம்.


**நியமன விதிகள்:-** 1. தெரிவு செய்யப்பட்டவரின் பதவி இரண்டு வருடத்திற்கு தகுதிகாண் நிலையில் இருக்கும்.
2. சங்கம் விதிமுறைகளுக்கு அமைய கோரும் பிணையை செலுத்த வேண்டும்.
3. வைத்திய பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு:** பணியாளருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

பொதுமுகாமையாளர்.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்,
கொடிகாமம், 4-6-94 (சி-9611)


## 31-ம்நாள் நினைவலைகள்



திருமதி

## மேரி யசிந்தா சூசைப்பிள்ளை

(றணிதா)

மலர்வு: 10-10-1958 உதிர்வு: 09-05-1994

பருத்தி நகர் தனிலே நீ பிறந்தாய்
பண்புடனே பாசத்தினில் நீ மிதந்தாய்
கனிவாய் கள்ளமில்லா நின்சிரிப்பில்
கவர்ந்தாய் நின் நிலத்தோரை
வந்ததோ மரணமுன் பூவுடலும் சாய்ந்ததோ
நொந்ததோ நின் உடலும் நோயினால் நித்தமும்
என்ன நினைத்து ஏங்கினாய் ஈற்றிலே
ஈர் பதினெட்டாண்டில் இவ்வுலக வாழ்வும்
கசந்ததுவோ

என் சொல்லி நாமழுவோம்
நினை மறவோம் எந்நாளும்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் (08-06-94) காலை 6.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

உங்கள் பிரிவால் வாடும்

85, தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.

பூவிலிங்கம் குடும்பத்தினர்

(8502)

# தமிழ்நாள் போட்டி பரிசில் வழங்கப்பட்டது

யாழ் மாவட்டத்தின் 13 கல்விக் கோட்டங்களிலுமுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும், கோட்டந்தோறும் நான்கு பிரிவுகளாக நடைபெற்ற தமிழ்நாள் போட்டியில் 72 நிகழ்வுகளுக்கான முதன் மூன்று இடங்களைப் பெற்ற ஆயிரத்துக்குக் கூடுதலான மாணவர்களுக்கு மாணவர் எழுச்சி நாளின் போது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, பல நோ. கூ. சங்கங்களின் உதவியோடு பரிசுகள் வழங்கப்பட்டன.

அத்துடன் கடந்த ஆண்டில் யாழ் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 5-ம் ஆண்டு இறுதிப் பொதுத்தேர்வில் மாவட்ட அடிப்படையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்ற 10 மாணவர்களுக்கும், 13 கோட்டங்களிலும் முதல் 10 இடம்பெற்ற 130 மாணவர்களுக்கும் மாணவர் எழுச்சிநாள் நிகழ்வில் பரிசுகள் வழங்கப்பட்டன.

1993இல் நடைபெற்ற 5ஆம் ஆண்டு பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் முதல் பத்து இடங்களைப் பெறுவோரின் பெயர், பாடசாலை புள்ளிகள் என்பன தரப்படுகின்றன.

இ. சுஜித்தா, தெல்லிப்பழை தந்தை செல்வா தெ. நி. பா, 293; யோ. சிவகலா வட இந்துமகளிர் கல்லூரி, 291; ச. சங்கீத்தா, இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, 290; அ. மாதங்கி, மகாஜனாக் கல்லூரி, 289; ம. தக்ஷாயினி, நல்லூர் காசிப்பிள்ளை வி., 289; பா. திரிசூலன், பெரியவிளான் றோ. க. த. பா. 288; க. அகல்யா வட இந்துமகளிர் கல்லூரி, 288; இ. யூலியஸ் நிசாந்தன் சில்லாலை, றோ. க. த. க. பா, 287; ச. வினோதன், இந்து ஆரம்பப் பாடசாலை, 287; சி. பிரணவன், புனித ஜோன் பொஸ்கோ வி, 287;

# யாழ். வீதிகளை திருத்த நிதி ஒதுக்க சம்மதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள பிரதான வீதிகளை செப்பனிடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் இணங்கியுள்ளதாக யாழ். அரச அதிபர் கொழும்பிலிருந்து அனுப்பிய செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

இதன் பிரகாரம் சகல பிரதான வீதிகளையும் திருத்தி அமைப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்குவதற்கும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை தலைவர் சம்மதம் அளித்துள்ளதாக அச்செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இரண்டு அதிர்வு றோலர்களையும் யாழ் மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பவும் அனுமதி கிடைத்துள்ளதாகவும் அரச அதிபரின் மற்றுமொரு செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. (சி)

அத்தியாவசிய பொருள்களுக்கான

# கப்பல் கட்டணம் குறைப்பு தாமத கட்டணமும் நீக்கம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களுக்கான கப்பல் கட்டணம் குறைக்கப்பட்டுள்ளதாகவும், தாமதக் கட்டணம் நீக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் கொழும்பிலிருந்து அறிவித்துள்ளார்.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது: யாழ். மாவட்டத்திற்கு பொருள்களை கப்பல் மூலம் கொண்டுவரும் போது கொழும்புதுறைமுகத்தில் பொருள்கள் ஏற்றும் போது தாமதம் ஏற்பட்டாலும் கப்பல் கட்டணம் நிலையாக மெற்றிக் தொன் ஒன்றிற்கு மூவாயிரத்து ஐந்நூறு ரூபா என்ற வீதத்திலேயே அறவிடப்படுமென அச்செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

முன்பு இக்கப்பல் கட்டணம் இத்தொகைக்கு கூடுதலாக இருந்ததுடன் கப்பல் துறைமுகத்தில் தாமதிக்கும் காலத்திற்கு மேலும் கட்டணம் வசூலிக்கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது (சி)

# கடனைச் செலுத்தினாலே சங்கங்களுக்கு புதிய கடன்

(யாழ்ப்பாணம்)

"யாழ். குடாநாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் அனைத்தையும் திருப்பிச் செலுத்தினாலேயே அவர்களுக்கு மீண்டும் கடன் வழங்க நாம்சம்மதிப்போம்."

இவ்வாறு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதி பிரதிதிட்டப் பணிப்பாளர் திரு. மகாலிங்கம் நமது செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

யாழ். குடாநாட்டில் உள்ள இருபத்தியொரு கூட்டுறவுச் சங்கங்கள் எமது பகுதிக்கு 37 மில்லியன் (3.7கோடி) ரூபாய் கடன் செலுத்த வேண்டியுள்ளது.

இவற்றை கூட்டுறவுச் சங்கங்கள் உரிய காலத்தில் செலுத்தவில்லை. ஒரு கூட்டுறவுச் சங்கம் மட்டும் எதுவித கடனும் இல்லாமல் இருக்கிறது.

இக் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் எம்மிடம் கடன் கேட்பது எப்படி? இதில் என்ன நியாயம் இருக்கிறது? இப்படிக் கடன் தொகை அதிகரித்துக் கொண்டு சென்றால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும்போது பொருள்களை நாங்கள் கொள்வனவு செய்வது எப்படி? என அவர் கேள்வி எழுப்பினார்.

அது ஒருபுறம் இருக்க கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்றஉணவுப்பொருள்களை அவை விற்பனை செய்து அந்தப் பணத்தைக் கொண்டு உணவு அல்லாத பொருள்களைக்கூட கொழும்பில் இருந்து கொள்வனவு செய்து கொண்டுவந்து விற்பனை செய்கின்றன.

அது மட்டுமல்ல சில கூட்டுறவுச் சங்கங்களினால் வரையப்பட்டு எம்மால் பெற்றுக் கொள்ளப்பட்ட பல காசோலைகள் வங்கிகளில் இடும் போது திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

அத்துடன் எம்மிடம் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகளை வங்கிகளில் காலதாமதமாக இடும்படி பல கூட்டுறவுச் சங்கங்கள் எம்மைக் கேட்கின்றன. எமக்குச் செலுத்தப்படவேண்டிய கடன் தொகை பல மாதங்களாக செலுத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன- இழுத்தடிக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன.? இந் நிலையில் எவ்வாறு மேலும் கடன் வழங்குவது? எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (பா),(தி)

# தலா ஓர் இலட்சம் செலவில் ஐந்து குளங்கள்புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் ஐந்து குளங்கள் புனரமைப்பு தொடர்பாக சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று நிதி ஒதுக்கீடு செய்துள்ளதாக தெரிய வருகின்றது.

ஒவ்வொரு குளத்தின் புனரமைப்புக்கும் தலா ஓர் இலட்சம் ரூபா என்ற அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஊடாக இந்த நிதியை பயன்படுத்தி இக் குளங்கள் புனரமைப்பு செய்யப்பட இருப்பதாகவும் இதற்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் மனித சக்தி பயன்படுத்த இருப்பதாகவும் தெரியவருகின்றது. (நி)

# குழாய்க் கிணறு

மக்கள் நன்னீரைப் பெறும் நோக்குடன் வலிகாமம் பிரதேசத்தில் பல பொது இடங்களிலும்குழாய்க்கிணறு அமைக்கும் வேலையை தேச நிர்மாணிகள் செய்துள்ளனர்.

இச் செயற்பாட்டின் மூலம் வலிகாமம் வடக்கில் மல்லாகம் கலைமகள் சனசமூக நிலையம், குலமங்கால் சனசமூகநிலையம், அளவெட்டி தெற்கு கலைவாணி சனசமூக நிலையம் ஆகிய இடங்களிலும், வலிகாமம் தெற்கில் உடுவில் மான் கல்லூரிக்கும் அருகாமை, வைரவர் வீதி, உடுவில் கமநல சேவை நிலையம் ஆகிய இடங்களிலும், வலிகாமம் கிழக்கில் ஆவரங்கால் மகாஜனா வித்தியாசாலை, சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, கோப்பாய் அரசினர் வைத்தியசாலையடி ஆகிய இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறையில் கப்பல்

# தாமதித்தால் ரூபா300) மேலதிகமாக கட்ட நேரும்

(யாழ்ப்பாணம்)

வடபகுதிக்கு உணவுப்பொருள்களுடன் வருகின்ற கப்பல்கள் பருத்தித்துறையில் பொருள்களை இறக்க ஒரு நாள் தாமதித்தால் அதற்கு மேலதிகமாக 3000ரூபாசெலுத்தப்பட வேண்டியுள்ளதாக யாழ் செயலக புனர் வாழ்வுப் பகுதியினர்தெரிவித்துள்ளனர்

ஒரு கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில்பொருள்களை இறக்கிக் கொண்டிருக்கையில் மற்றுமோர் கப்பல் அங்கு பொருள்களை இறக்கவரும் பட்சத்திலேயே இப்பிரச்சினை எழுகின்றது

இதனால் இரண்டாவதாக வந்தகப்பல்பொருள்களைஇறக்க தாமதிக்கின்றது எனவே தான் இதற்கான செலவாக ஒருநாளுக்கு 3000ரூபா செலவாகின்றது என தெரிவிக்கப்பட்டது. (பா))தி)

# எண்மரும் நீக்கப்பட்டாலே இ.தொ.கா.ஆதரவுநீடிக்கும்

\- எஸ். சதாசிவம்

(கொழும்பு)

இ. தொ. காவின் தீர்ப்புக்கு முரணாக செயற்பட்டதனால் கட்சியின் தேசிய சபையின் ஏகமனதான முடிவின்படி கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட எட்டுப் பேரும் மத்திய மாகாண சபை உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும். அப்போதுதான் இ.தொ.காவின் ஆதரவு தொடர்ந்தும் ஐ. தே.கவிற்கு மத்தியமாகாணத்தில்கிடைக்கும். இவ்வாறு மத்திய மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் எஸ். சதாசிவம்கூறியுள்ளார்.

லங்காதீப சிங்கள இதழுக்கு பேட்டியளித்த அவர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை எங்களைத் தெரிவு செய்து அனுப்பியவர்கள் தோட்டப்புற மக்களே யாவர். அதனால் எங்கள் எட்டுப் பேரையும் அந்த மக்கள் மட்டுமே நீக்கமுடியும் என்று மத்திய மாகாணசபை உறுப்பினரான ஆர். தங்கவேலு கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் வேறு எவராவது எம்மை விரட்டியடிக்க முன் வந்தால் அவர்களுக்கு நல்ல பாடம் புகட்டப்படும். இ. தொ. கா. தொண்டமானின் தனிச் சொத்து அல்ல. அது அனைத்து தோட்ட மக்களுக்கும் உரியது. காங்கிரசின் வளர்ச்சிக்காக தொண்டமானைப் போலவே அண்ணாமலை, வெள்ளையன் அசீஸ், ராமானுஜம், சுப்பையா, ராசலிங்கம், சி. வி. வேலுப்பிள்ளை, ஜேசுதாசன் போன்றோரும் உழைத்துள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

தேசிய பயிலுனர் சபையால் நடாத்தப்படும் பயிற்சிகள் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ். கிளையில் நடாத்தப்படவுள்ளது. இதற்காக தட்டச்சு, சுருக்கெழுத்து (தமிழ், ஆங்கிலம்) தையல் பயிற்சி, உதவித் தாதியர் பயிற்சி ஆகியவற்றுக்கான விண்ணப்பங்கள் மாணவர்களிடம் இருந்து கோரப்படுகின்றன. அவர்கள் வதியும் உதவி அரசாங்க அதிபர் பிரிவு - செஞ்சிலுவைச் சங்க பிரிவு அவர்களைத் தெரிவு செய்து யாழ். கிளைக்கு அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நேர் முகப் பரீட்சை முறையே இம்மாதம் 13-ம், 14-ம் திகதிகளில் கிளையில் நடைபெறவுள்ளன. பயிற்சிகள் யாவும் 22-06-94 இல் ஆரம்பமாகவுள்ளது. பயிற்சியின் போது மாணவர்களுக்கு சிறுதொகை உதவிப்பணமாக வழங்கப்படும். (41)

## மாட்டுவண்டி சவாரி

நீர்வேலி ஐக்கியவிளையாட்டுக் கழக ஆதரவில்எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நீர்வேலி முற்றவெளி மைதானத்தில் மாட்டு வண்டிச் சவாரி நடைபெறவுள்ளது. ஏ. பி. சி. என மூன்று பிரிவுகளாக இது நடத்தப்படும்.

# பொதுப்பட்டியலில் போட்டி; சு.கவுடன்ஜ.ஐ.தே.மு.பேசும்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித்பிரிவு) யின் பிரதான தலைவர்களும் விரைவில் கூடி எதிர்வரும் தேர்தல்களின் போது பொதுப்பட்டியல் ஒன்றின் கீழ் போட்டியிடுவது தொடர்பான பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளனர்.

சுதந்திரக் கட்சியின் மத்திய குழு இவ்விடயம் தொடர்பாக பேச்சு நடத்தப்பட வேண்டும் என்ற முடிவு செய்திருப்பதாக சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தர்மசிறி சேனநாயக்க கூறியுள்ளார். இதேவேளை ஜ.ஐ.தே.முவினரும் இது சம்பந்தமாக திருமதி சிறிமாவோவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

ஆளும் ஐதே, கட்சியை தோல்வியுறச் செய்வதற்காக ஐ.தே.கவிற்கு எதிரான சகலசக்திகளையும் ஐக்கியப்படுத்த வேண்டும் என்று தர்மசிறி சேனநாயக்கமேலும் கூறியுள்ளார்.

# பல்கலைக்கழக பொருள்கள் எடுத்துவர அநாவசிய தடை

பாதுகாப்பு அமைச்சு செயலருக்கு கடிதம்

போது கொழும்புதுறைமுகத் ... டத்தக்கது (சி)

## பெண்ணை தாக்கியவருக்கு தண்டனை விதிப்பு

(தென்மராட்சி)

பெண்மணி ஒருவரைத் திட்டமிட்டுத் தடியால் அடித்துக் காயப்படுத்திய ஒருவருக்கு எதிராக சாவகச்சேரி காவல் துறையினரால் சாவகச்சேரி நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைதடி நவபுரம் பகுதியைச் சேர்ந்த பெண்மணி ஒருவரே தாக்குதலுக்கு இலக்கானவராவார். எதிராளிக்கு எதிரான குற்றப்பத்திரம் வாசித்துக் காட்டப்பட்டதை தொடர்ந்து எதிரி குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார். இதனையடுத்து பதினைந்து நாள் சிறைத்தண்டனையுடன் 500ரூபா அபராதம் கட்டும் படியும், சம்பந்தப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாக 1000ரூபா செலுத்தும் படியும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (86)

## எறிகணை வீச்சினால் குடியிருப்புகள் சேதம்

(நமது நிருபர்)

வலிகாமம் மேற்கு பகுதி மக்கள் குடியிருப்புகள் மீது நேற்றுமுன்தினம் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட கண்மூடித்தனமான எறிகணைத்தாக்குதல்களின்போது இரு குடிசைகள் முற்றாகச் சிதறிக் காணப்படுவதுடன் பல வீடுகளும் பயன்தரு மரங்கள் பலவும் பலத்த சேதத்திற்குள்ளாகின.

பலாலி இராணுவமுகாம் இராணுவத்தினரும் மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் நேற்றுமுன்தினம்காலை7மணி முதல் 7.30 மணிவரைமக்கள்வாழ் விடங்கள் மீது அகோர எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர். இதன்போது ஏவப்பட்ட பெருமளவு எறிகணைகள் பண்டத்தரிப்பு, நிற்சாமம், பராயன்பற்று, வடலியடைப்பு, பனிப்புலம், காந்தைப் பகுதிகளில் பரவலாக வீழ்ந்து வெடித்தன.

இதன்போது நிற்சாமம் அகதிமுகாம் மீது வீழ்ந்து வெடித்த எறிகணையினால் அம்முகாமின் இரு குடிசைகள் முற்றாகச் சிதறிக் காணப்படுவதுடன் மேலும் இரு வீடுகள் சேதமடைந்தன. மேலும் வடலியடைப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைகளால் பொதுமக்களின் பயன்தரு மரங்கள் பல சேதமடைந்துள்ளதுடன் வெற்றிலைத் தோட்டம் ஒன்றும் முற்றாகச் சேதமடைந்தது.

---

## கண்பரிசோதனை

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியில் கண் பாதிக்கப்பட்டோருக்கான பரிசோதனையொன்று லயன்ஸ் கழகத்தினரால் சாவகச்சேரி வைத்தியசாலையில் கடந்த ஞாயிறன்று நடாத்தப்பட்டது.

இதில் தென்மராட்சிப் பகுதியிலுள்ள 150 மாணவ மாணவிகளும் பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் 77 பேருக்கு கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது. முதியவர்களில் சுமார் 100 பேருக்கு மேல் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு 16 பேர் கண் சத்திர சிகிச்சைக்காக சிபார்சு செய்யப்பட்டுள்ளனர். (86)

## பாதுகாப்பு அமைச்சு செயலருக்கு கடிதம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்துக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களை கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கும் படி கோரி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு இப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

அண்மைக்காலமாக இப்பல்கலைக் கழகத்தின் தேவைகளுக்கென கொழும்பில் கொள்வனவு செய்யப்படும் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்குவதில் கெடுபிடிப் போக்கை பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு கடைப்பிடித்து வந்துள்ளது. சில பொருள்களுக்கு அனுமதி வழங்க முற்றாக மறுப்புத் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்தே யாழ் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் மேற்படி கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட இக் கடிதம் யாழ் அரச அதிபருடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதே போன்றதொரு கடிதம் ஏற்கனவே பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழுவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க)

# தேசம் விடிகின்ற வேளையில் மக்கள் வாழ்வும் விடிய வேண்டும்

- இளம்பரிதி

(தென்மராட்சி)

ஒவ்வொரு தனிமனிதனும் விழிப்புணர்ச்சி அடைகின்ற போது சமுதாயம் விழிப்புணர்ச்சி பெறுகிறது. சமுதாயத்தின் விழிப்புணர்ச்சியில்தான் தேசத்தை வளர்க்க முடியும். எங்களுடைய தேசம் விடிகின்ற போது மக்களுடைய வாழ்வும் விடிய வேண்டும். இதுவே எமது தலைவரின் ஆசையாகும். இவ்வாறுயாழ் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் நடாத்திய வதிவிட வேளாண்மைப் போட்டியின் கோட்ட ரீதியாக வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பேசுகையில், அவர் இதனைத் தெரிவித்தார். பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தென்மராட்சிக் கோட்டப்பொறுப்பாளர் மகிந்தன் தலைமையில்வரணி மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்று முன்தினம் இந்நிகழ்ச்சி இடம்பெற்றது.

இந்நிகழ்ச்சியில் தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை, பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். வதிவிட வேளாண்மைப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை கந்தண்ணா அவர்கள் வழங்கினார். முதற்பரிசை முகமாலை வடக்குபளையைச் சேர்ந்த க. கருணாகரனும், இரண்டாவது பரிசை பளை வேம்பொடுகேணியைச் சேர்ந்த முத்தையா இராசையாவும், மூன்றாம் பரிசை இராமாவில் கொடிகாமத்தைச் சேர்ந்த த. இராசையாவும் பெற்றுக் கொண்டனர். இதில் வட்டவை ரீதியாக இடம்பெற்ற போட்டிகளுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [86]

---

## விசேட சிற்றூர்தி சேவை

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் யாழ் மத்திய பஸ் நிலையத்திலிருந்து விசேட சிற்றூர்தி சேவைகள் நடத்தப்படவுள்ளது.

## கற்கை உபகரணம் எடுத்து வரப்படும்

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்குவதற்கென 12ஆயிரம் கற்பித்தல் உபகரணங்கள் யுனிசெவ் நிறுவனத்தினரால் கொழும்பிலிருந்து எடுத்து வரப்படவுள்ளது. இவற்றை எடுத்துவருவதற்கான அனுமதியை பாதுகாப்பு அமைச்சு வழங்கியுள்ளது. இவை வெகு விரைவில் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்படலாம் எனத் தெரியவருகின்றது (சி)

## நூல் நிலையம் திறக்கப்படவுள்ளது

நீர்வேலி காமாட்சியம்பாள் சனசமூக நிலையத்தினர் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் நான்கு மணியளவில் நூல் நிலையமொன்றைத் திறந்து வைக்கவுள்ளனர். இந் நூல் நிலையத்தில் நூல்களை இரவல் கொடுக்கும் பகுதியும் இடம் பெற்று இருக்கிறது குறிப்பிடத்தக்கது.

தப்பட வேண்டும் என்ற கூறியுள்ளார்.

## சந்திரிகா-பிரேமச்சந்திரா உறவில் முறுகல் நிலை

### -பரஸ்பரம் எச்சரிக்கை விடுப்பு

மேல் மாகாண சபையின் சுகாதார மற்றும் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் பிரேமரட்ணா குணசேகர பதவியிலிருந்து நீக்கப்படவிருப்பதாக மேல் மாகாண சபை முதலமைச்சர் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேல் மாகாண சபை ஆளுநர் எஸ். சர்வானந்தாவிற்கு அவர் கடிதம் எழுதியிருப்பதாகவும் தெரியவருகிறது. இவர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் தெரிவு செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை பிரேமரட்ணா அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் வட மேல் மாகாண சபையின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் இரு அமைச்சர்களைப் பதவி நீக்கம் செய்ய வேண்டி வரும் என்று வட மேல் மாகாண முதல்வர் ஜி.எம்.பிரேமச்சந்திரா எச்சரிக்கை விடுத்துள்ளார். ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் ஆதரவு தொடர்ந்தும் தேவை என திருமதி சந்திரிகா எதிர்பார்த்திருப்பாரேயானால்பிரேமரட்ணா அமைச்சர் பதவியிலிருந்து நீக்கப்படக் கூடாது எனவும் தெரிவித்தார். பிரேமரட்ணா பதவி நீக்கப்பட்டால் வட மேல் மாகாண சபையின் அமைச்சர்கள் இருவர் பதவி நீக்கப்படுவது தவிர்க்கமுடியாதது ஆகும் எனவும் தெரிவித்துள்ளார்.

---

## சுத்தம் பேண நடவடிக்கை

முல்லை மாவட்டத்தில் உள்ள இறைச்சிக் கடைகளில் சுத்தம் பேணுவதை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செயல்படுத்தி வருகின்றது. குறிப்பாக சுற்றாடல், கடையில் பாவிக்கப்படும் உபகரணங்கள், ஆயுதங்கள் துப்புரவாக இருப்பதோடு, இறைச்சித் துண்டங்கள் வைக்கும் மேசை அல்லது பலகை துப்புரவாக இருப்பதுடன், பொலித்தீன் அல்லது மெழுகுச்சீலையால் போர்க்கப்பட்டு அதன் மேல் தான் விற்பனைக்கான இறைச்சி வைக்கப்பட வேண்டும். எனவும் கேட்கப்பட்டுள்ளது. அத்துடன் இறைச்சி விற்பவரின் வியர்வை இறைச்சியுடன் சேர்வதைத் தடுப்பதற்கு கட்டாயம் மேலங்கி அணிய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்நடவடிக்கைகள் தமிழீழ விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் ஆலோசனையுடன் எடுக்கப்பட்டு வருவதுடன் இதற்கான சுற்று நிருபம் ஒன்று தயாரிக்கப்பட்டு சகல இறைச்சிக்கடை உரிமையாளருக்கும் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

## கலந்துரையாடல்

[யாழ்ப்பாணம்]

சகல ஆங்கில மருந்து வர்த்தக மொத்த வியாபாரிகளுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 2மணிக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெறவுள்ளது. ஆங்கில மருந்து வர்த்தக மொத்த வியாபாரிகள் சகலரையும் இக்கலந்துரையாடலுக்கு தவறாது சமுகமளிக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை கேட்டுள்ளது.

## ஆணைக் குழு நியமிக்க மீண்டும் கோரிக்கை

### கா. போ. பிள்ளைகளின் பெற்றோர் விடுத்தனர்

கடந்த ஐந்து வருடங்களிலும் நடைபெற்ற பல்வேறு கொலைகள் தொடர்பாக சுதந்திரமான விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என்று காணாமற் போன பிள்ளைகளின் பெற்றோர் சங்கம் மீண்டும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இக் காலப் பகுதியில் பெறுமதிமிக்க பல தரப்பட்ட உயிர்கள் திட்டமிட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும், இக் கொலைகள் தொடர்பாக இது வரை எந்த தடயங்களும் அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ள முடியாமற் போய் விட்டதாகவும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 'சிப்பி' வெளியிடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சென்ற ஞாயிறு (5ம் திகதி) கொண்டாடப்பட்ட மாணவர் எழுச்சி நாள் நிகழ்வின் போது கெற்பலி பண்டிதர் குடியிருப்பில் இயங்கும் புங்குடுதீவு சண்முகநாதன் வித்தியாலயத்தில் 'சிப்பி' என்னும் கையெழுத்துப் பிரதி வெளியிட்டு வைக்கப்பட்டது. அத்துடன் சிரமதானம் மூலம் பாடசாலை சுற்றுப்புறங்களும் துப்புரவு செய்யப்பட்டன. (22)

## ஆகஸ்ட் மாதத்துக்குமுன் 4500 பிரசார கூட்டம்

### சுதந்திரக்கட்சி நடத்தும்

(கொழும்பு)

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்திற்கு முன்னர் மாதாந்தம் 4500 பொதுக் கூட்டங்களை நடத்த சுதந்திரக்கட்சி செயற்குழு முடிவு செய்துள்ளது, இதன் முதற் கூட்டம் கடந்த ஞாயிறு கண்டியில் நடைபெற்றது.

இதனிடையே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வைத்திய சிகிச்சைக்காக நேற்று வெளிநாடு பயணமானார், அதுவரையில் மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா, தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட ஆகியோர் பிரசார கூட்டங்களை முன்னெடுத்துச் செல்வர்.

## ஜூலை 2-இல் விஜேதுங்கா வவுனியா வர திட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதி விஜேதுங்கா அடுத்தமாதம் 2ஆம் திகதி வவுனியாவிற்கு வரவுள்ளார். வன்னி மாவட்ட ஐ. தே. க குழுக்களின் விசேட கூட்டத்தில் கலந்துகொள்ளவே ஜனாதிபதி வவுனியா வருகிறார். இதற்கு முன்னோடியாக எதிர்வரும் 11ஆம் திகதி ஐ. தே. க பொதுச் செயலர் காமினி விஜயசேகர வவுனியா வருகிறார்.

எதிர்வரும் தேர்தலை முன்னிட்டு வவுனியா ஐ. தே. க மாவட்ட குழுவை பலப்படுத்துமாறு ஜனாதிபதி விடுத்த பணிப்பையடுத்தே காமினி விஜயசேகர வவுனியா வருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.


# பொலிகை மண் பெற்றெடுத்த மாவீரர்கள் நினைவாக

ஒற்றுமை வி. கழகம் நடாத்தும்

# விளையாட்டுப் போட்டியும் கலை விழாவும்

காலம்:- 09 , 10 - 06 - 94 இரு தினங்கள்

இல்ல விளையாட்டுப் போட்டியுடன் பார்வையாளருக்கான குத்துச்சண்டை, மல்யுத்தம் உட்பட சகல விளையாட்டுக்களும்

09-06-94 கழக மைதானத்தில்

இரவு 8 மணிக்கு ஆரம்பமாகும்

திரு. நடராசா சோதிசிவம்

அவர்களின் மாணவர்களினதும் அவரது அன்பிற்குரிய

மாணவரான தமிழாராய்ச்சி மாநாட்டு புகழ்

பொலிகை தில்லை - சிவலிங்கத்தின்

மாணவர்களினதும் சிலம்ப விளையாட்டுக்கள் நடைபெறும்.





வீர தீர சாகச விளையாட்டுக்கள்


## தோல்வி நோக்கியே யானை ஓடிக்கொண்டிருக்கிறது

### - லூசியன் கருணாநாயக்க

(கொழும்பு)

யானை இப்போது தோல்வியை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றது. மக்களுக்கு எப்படி லஞ்சம் வழங்குவது? எப்படி வாக்குகளைப் பெறுவது என்ற சிந்தனையிலேயே அரசு இப்போது இருக்கின்றது. பொருள்களின் விலை குறைப்பு மூலம் மக்களுக்கு லஞ்சம் வழங்கும் யுக்தியை அது அறிந்துகொண்டுள்ளது இவ்வாறு சண்டே ஐலன்ட் பத்திரிகையில் லூசியன் ராஜகருணாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அவர் எழுதியுள்ள கட்டுரையில் மேலும் குறிப்பிடுகையில் பாணின் விலை, மருத்துவக் கட்டணம், பஸ் கட்டணம், மருந்து விலை என நீண்ட பட்டியல்ஒன்றின் மூலம் வாழ்க்கைச் செலவை குறைக்க முயற்சிப்பதாக அரசு கூறுகின்றது.

ஆனால் இந்த விலைக் குறைப்புக்களால் நாடு சுமக்கப் போகும் சுமையைப் பற்றிய கவலை டி. பி. விஜேதுங்கா அரசிற்கு இல்லை. ஏனெனில் தேர்தலின் பின்னர் சுமக்கும் பொறுப்பு அக்கட்சிக்கு இல்லை என்பதையும் அக் கட்சி அறியும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களை குழந்தைகள் எனவும் மூடர்கள் எனவும் கருதி இனிப்புவழங்கும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டு இருக்கிறது எனவும் தெரிவித்துள்ளார்.

## ஆங்கில மொழி அறிவை மாணவர்வளர்க்கவேண்டும்

### - பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(வடமராட்சி)

ஆங்கிலம் சர்வதேசமொழி நாம் ஒவ்வொருவரும் ஆங்கில மொழியை கற்கவேண்டும். ஆங்கிலமொழி இன்று எமக்கு அவசியமாகிறது.

இவ்வாறு யூன் முதலாம் திகதி தம்பசிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் ஆங்கிலத்துறை பொறுப்பாளர் திரு. இ. செல்வகணேசபிள்ளை தலைமையில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டி வைபவத்தின் போது பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரட்ணம் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும் போது இப்பாடசாலை அதிபர் திரு. நா. சந்திரசேகரத்தினதும் சக ஆசிரியர்களினதும் திறமையாலும் பல போட்டி நிகழ்வுகளிலும் இப்பாடசாலை கலந்து கொண்டு முதலிடம் வகித்து ஒரு முன் மாதிரிப் பாடசாலையாக திகழ்ந்து வருகிறது.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் ஆங்கில மொழியை வளர்க்கவேண்டும். மாணவர்கள் மத்தியில் ஆங்கில மொழி வளர வேண்டும். ஆங்கில மொழி சர்வதேசமொழி. இம் மொழியை நாம் நிறையக் கற்றுக் கொள்ளாவிட்டால் சர்வதேச ரீதியில் முகம் கொடுப்பது கடினமானதாக இருக்கும். இம் மொழி தெரியாதவர்க



## வீர தீர சாகச விளையாட்டுக்கள்

### 10-06-94 மாலை 4 மணிக்கு ஆரம்பமாகும்

பருத்தி நகர் தந்த பெருந்திறல் சான்றோன்
**திரு. M. துரைரத்தினம்**
அவர்களும் அவரின் மாணவனாகிய பொலிகையூர் தந்த
**திரு. சாண்டோ . செல்வராஜா**
இவர்களால் பயிற்சி அளிக்கப்பட்ட எமது கழக வீர-வீராங்கனைகளின்
மயிர்க்கூச்செறியும் வீர தீர சாகச விளையாட்டுக்கள் வரிசையில்

**தமிழீழத்தில் முதன் முதலாக பெண் வீராங்கனைகளாக**







செல்வி தங்கவேலாயுதம் ஜமுனா
அதிபாரம் கொண்ட உழவுயந்திரத்தையும்

செல்வி அமிர்தநாதர் மாலா
அதிபாரம் கொண்ட E.L.F. வாகனத்தையும்

தமக்கு மேலால் ஏற்றுவார்கள்

★ **தங்கவேலாயுதம் தங்கேஸ்வரராசா**
அதிபாரம் கொண்ட இரண்டு இசுசு லொறிகளையும்

★ **செல்ல மாணிக்கம் ரஞ்சகுமார்**
அதிபாரம் கொண்ட இரண்டு உழவுயந்திரத்தை ஆட்களை ஏற்றி ஒன்றன் பின் ஒன்றாக தொடராக) மார்பின் மேல் ஏற்றுவார்கள்

★ **கணேசமூர்த்தி கவீந்திரன்**
தமது தலை முடியினால் வாகனம் ஒன்றை கட்டி இழுப்பார் (காலை 7 மணி)

★ **சிவலிங்கம் பிறேம்சிங்**
தமது தலை முடியினால் ஓடும் மோட்டார் சைக்கிளை இழுத்து நிறுத்துதல்

★ **தங்கவேலாயுத பரமானந்த**
இரண்டு உழவு இயந்திரத்தை மார்பின் மேல் ஏற்றுதல்

★ **குணபாலசிங்கம் சுரேஷ்குமார், மருதநாயகம் பாலு**
இருவரும் மார்பின் மேல் பாரம் கொண்ட பாறாங்கற்களை வைத்து சம்மட்டியால் அடித்து உடைப்பார்கள்

★ **பிலோமிநாதர் எட்வேட்**
நெருப்பு புதைகுழியினுள் பலமணி நேரம்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

(8425)

## பொலிகண்டி ஒற்றுமை வி. கழகம்


## யாழ்ப்பாணத்து இராத்திரிகள் பரிசு பெற்றது

தமிழ்நாடு கோயம்புத்தூரிலுள்ள லில்லி தேவசிகாமணி நிறைவு இலக்கியப் பரிசுகள் திட்டத்தில் உலகெங்கும் 1993 ஆம் ஆண்டு வெளிவந்த 51 சிறுகதைத் தொகுதிகள் போட்டிக்குட்படுத்தப்பட்டன. ரொக்கப்பரிசு வழங்குவதற்கு விழாவில் கலந்து கொள்வதற்கான போக்குவரத்துச் செலவையும் அந்த இலக்கிய நிறுவனம் ஏற்றுக்கொள்ளும் இந்தப் போட்டியில் ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை (அவுஸ்திரேலியா) எழுதிய 'அவா' என்ற சிறுகதைத் தொகுதி அகில உலக ரீதியில் முதலாவது இடத்தைப் பெறுகின்றது. இரண்டாம் பரிசு பெறுகின்ற நான்கு சிறுகதைத் தொகுதிகளில் செங்கை ஆழியானின் 'யாழ்ப்பாணத்து இராத்திரிக ' ஒன்றாகும். இப்பரிசுத்திட்ட நடுவர்களாக வல்லிக்கண்ணன், தி. க. சிவசங்கரன் ,ராஜம் கிருஷ்ணன் ஆகியோர் விளங்கினர். பரிசளிப்பு விழா 22-05-1994 அன்று கோவை அன்னபூர்ணா கலையரங்கில் நிகழ்ந்தது.

## வைத்தியசாலையில் பேராசிரியர்துரைர ஜா

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் துரை ராஜா சுகவீனம் காரணமாக கொழும்பு நவலோக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த சில நாட்களாக பார்வையாளர்கள் இவரைச் சந்திப்பதற்கு அனுமதி வழங்கப் படுவதில்லை என்று கொழும்பில் இருந்து நேற்று மாலை எமக்கு கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது. (க)

வர்க சர்வதேசரீதியில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள்.

இந்தப் பாடசாலையிலே ஆங்கில மொழி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. இங்கு ள மாணவர்கள் ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சி பெற்றிருப்பதை உணர முடிகிறது. இது இந்தப்பாடசாலை அதிபர் ஆசிரியர்களது திறமையை எடுத்துக் காட்டுகிறது. இவர்களை நான் மனதார பாராட்டுகிறேன். எமது கோட்டத்தில் சிறிய பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஆங்கில அறிவில் முன்னமை பெற்றிருப்பதையிட்டு நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன் என்றார். மற்றும் பாடசாலை அதிபர் திரு. நா. சந்திரசேகரமும் உரையாற்றினார். (யோ)

## சத்துணவு வழங்கப்படுகிறது

வலிமேற்கு பிரதேச செயலகத்தினால் கடைப்பிடிக்கப்படும் போஷாக்கு வாரத்தினையொட்டி போஷாக்கு குறைந்த சிறுவர்களுக்கு ஜீவாகாரம், பயிற்றம் உருண்டைகள் போன்ற சத்துணவுகள் வழங்கப்படுகின்றன.

இந்த சத்துணவுகளை வலிமேற்குப் பிரிவில் இயங்கும் பாலர் பாடசாலைகளில்கல்வி கற்கும் போஷாக்கு குறைவான சிறுவர்களுக்கும்,ஏனையோர்க்குமாக மொத்தம் 400ஜீவாகாரபைக்கட்டுகளை வலிகாமம் மேற்கு பிரதேச சபையினர் வழங்க முன்வந்துள்ளனர். இது போன்று இலங்கை செஞ்சிலுவைச்சங்க வலிமேற்கு பிரிவுக் கிளையினரால் 500 பேர்களுக்கு பயிற்றம் உருண்டைகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

6ஆம் திகதி ஆரம்பமான சத்துணவு வழங்கும் நிகழ்வு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் இடம்பெற்ற போது மேற்படி ஆகாரங்களும், இலைக்கஞ்சியும் அப்பகுதி சிறார்களுக்கு வழங்கப்பட்டன. (41)

பொதுசன நூலகம்

சிந்தனைக்கு

கீழே விழுந்தவன், தாழ்ந்தவனுக்கு உதவ முடியாது.

- ஜார்ஜ் ஹெர்பெற்ட்.

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 08.06.1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## தன்னிலை மறந்த இனவெறி

இவ்வாண்டிற்கான இராணுவச் செலவிற்கென ஒதுக்கப்பட்ட சுமார் 2200 கோடி ரூபாவிற்கு மேலாக பாதுகாப்பு அமைச்சு கோரிய 1100 கோடி ரூபாவை ஒதுக்குவதற்கு திறைசேரி மறுத்துள்ளது ஆனால் இதனை மறுப்பு என்பதைவிட திறைசேரியால் முடியவில்லை என்றேகூறவேண்டும்.

கடந்த ஆண்டின் இறுதியில் பூநகரி இராணுவ முகாம் தோல்வியைத் தொடர்ந்து இராணுவம் பெரும் அளவில் ஆயுத தளபாடக் கொள்வனவில் கவனம் செலுத்தியது. இக்கொள்வனவு பீரங்கிகள், டாங்கிகள், கவசவாகனங்கள், கனரகத் துப்பாக்கிகள் எனவும், பீரங்கிக் கப்பல்கள், ரோந்துக்கப்பல்கள் எனவும், உலங்குவானூர்திகள் எனவும் பெரும் எடுப்பிலானதாக இருந்தது. இதில் பல நூறுகோடி ரூபாக்கள் செலவு செய்யப்பட்டது.

தொடர்ச்சியாக வடக்கில் ஏற்பட்ட இராணுவத் தோல்விகளால் துவண்டு போயிருந்த இராணுவத்திற்கு புத்துயிர் அளிக்கவும், அவர்களைப் போர் முனைக்கு மீண்டும் அனுப்புவதற்கும் இவை அவசியமானவையாக இருந்தன. இவை இல்லாது இராணுவத்தை முன் தள்ள முடியாத நிலையே இருந்தது.

இநேசமயம், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைத் தவிர வேறு தீர்வு என்ற பேச்சிற்கே இடமில்லை என்ற ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவின் நிலைப்பாடும் இதற்குச் சாதகமாகவே இருந்தது. பெரும் ஆயுதக் கொள்வனவிற்கும் டி.பி.விஜேதுங்காவின் அனுமதி இலகுவாகக் கிடைக்கப் பெற்றது. சில ஆயுதக் கொள்வனவு பேச்சுவார்த்தைகளை ஜனாதிபதியே நேரில் மேற்கொள்ளும் நிலை கூட உருவாகி இருந்தது.

இந்நிலையில் இராணுவம் நிதி ஒதுக்கீடு பற்றியோ, நிதிப்பற்றாக்குறை பற்றியோ சிந்தித்ததாகத் தெரியவில்லை. அவ்வாறு சிந்திக்கவேண்டிய தேவையும் இருக்கவில்லை. கிடைத்ததை வேண்டிக்குவித்தல் என்ற ரீதியில், சீனாவிற்கும், தென்ஆபிரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் மாறிமாறி அதிகாரிகள் பறந்து

# றுவாண்டாவில் இன ஒழிப்பு தொடர்கின்றது

# கையாலாகாத நிலையில் ஐ. நா. தவிக்கிறது

மத்திய ஆபிரிக்காவிலுள்ள சிறிய நாடுகளில் ஒன்றான றுவாண்டாவில் தொடர்ந்தும் சண்டை இடம்பெற்று வருகின்றது. இச்சண்டை காரணமாக இதுவரை 5 இலட்சம் பேருக்கு மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். மேலும் பல இலட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர், இவர்களில் பலர் அயல்நாடுகளான தன்ஸானியா புருண்டி ஆகியவற்றுக்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர்.

சுமார் 60 ஆயிரம் அகதிகள் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ள முகாம்களில் வசித்து வருகின்றனர். இவர்களுள் பெரும்பாலானோர் சிறுபான்மைடுட்ஸிஇனத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஓர் இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்டோர் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறி இருப்பதாக மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகள் நம்புகின்றன.

றுவாண்டாவில் எஞ்சியுள்ள மக்களை பாதுகாப்பதற்காக ஐ.நா ஐயாயிரத்து ஐந்நூறு சமாதானப் படையினரை அங்கு அனுப்புவதற்கு முன்வந்துள்ளது. றுவாண்டாவில் நடைபெற்றுவரும் இன ஒழிப்பு நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக கானா, எதியோப்பியா, செனகல் ஆகியனவும் தமது படைகளை அங்கு அனுப்பியுள்ளன. நைஜீரியா, ஸிம்பாப்வே ஸாம்பியா, கொங்கோ, இத்தாலி, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளும் உதவி செய்வதற்கு முன்வந்துள்ளன.

இதேவேளை றுவாண்டாவில் இடம்பெற்று வரும் இன ஒழிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு ஐ.நா. ஸ்தாபனம் மட்டுமல்லாமல் முழுச் சர்வதேச சமூகமும் தவறிவிட்டதென ஐ.நா. பொதுக் காரியதரிசியான பெட்ரோஸ் பெட்ரோஸ் காலி கூறியுள்ளார்.

றுவாண்டாவில் இடம்பெற்று வருகின்ற மிலேச்சத்தனமான இன ஒழிப்பு நடவடிக்கைகளுக்கான காரணகர்த்தாக்களை கண்டறிவதற்கான முயற்சிகளில் ஐ. நா ஸ்தாபனம் உடனடியாக இறங்க வேண்டும் எனச் சர்வதேச மன்னிப்புச் சபை வற்புறுத்திக் கூறியுள்ளது.

அங்கு நடைபெற்று வரும் மனித உரிமை மீறல் சம்பவங்கள் பற்றி விசாரணை நடாத்துவதற்கு ஐ. நா. ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது. ஐ. நாவின்இம் முயற்சியை சர்வதேச மன்னிப்புச் சபை பாராட்டி இருக்கின்றது.

ஐ. நா. சமாதானப்படையினர் கிகாலிக்குச் சென்று அங்கு தேவையான அவசரப் பணிகளை மேற்கொள்வதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும், ஷாய்ரேயின் ஜனாதிபதி மொபுட்டு செஸே செகோ மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இங்கு தொடர்ந்து இருப்பதற்கு எமக்கு பயமாக உள்ளது; அடுத்த நிமிடம் எமது உயிர்களுக்கு என்ன நடக்குமோ தெரியாது. ஆகையினால்தான்நாம்றுவாண்டாவிலிருந்து வெளியேறி செல்கிறோம் எனப் பலர் கூறுகின்றனர்

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது பலர் கைவிடப்பட்ட நிலையில் உள்ள வாகனங்கள், மரங்கள் ஆகியவற்றிற்குள் வாழ்ந்து வருகின்றனர். கடந்த ஏப்ரல்மாதம் ஆறாம் திகதி முதல் றுவாண்டாவில் இடம்பெற்று வரும் சண்டை காரணமாக ஓர் இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது இருப்பிடங்களை இழந்துள்ளனர்.

றுவாண்டாவிலுள்ள ஐ. நா. சமாதான படையினருக்கு மேஜர் ஜெனரல் றோமியோ டலாயா தலைமை தாங்குகின்றார். ''றுவாண்ட தேச முன்னணி கிளர்ச்சியாளர்கள் பொதுமக்களைப் படுகொலை செய்து வருகின்றனர். மேலும் இக் கிளர்ச்சியாளர்களுக்கு மேஜர் ஜெனரல் றோமியோ டலாயாவும் ஏனைய ஐ. நா. சமாதானப் படையினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்'' எனப்பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

ஆனால் அரசாங்கப் படையினர் சிறுபான்மை டுட்ஸி இனத்தவர்கள், ஹூட்டு இனத்தைச் சேர்ந்த எதிர்க் கட்சி உறுப்பினர்கள் ஆகியோரைப் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவர்கள் படுகொலை செய்து வருவதாக ஐ.நா அதிகாரிகள், மீட்புப் பணியாளர்கள் மற்றும் சம்பவத்தை நேரில் கண்டோர் தெரிவித்தனர்.

இதே வேளை கொள்ளையிடப்பட்ட கார்,வான் ஆகியவற்றில் றுவாண்டாவின் அரசாங்க படையினர் முற்றுகையிடப்பட்டுள்ள தலைநகர் கிகாலியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். மேலும் தாம் இவ்வாறு செல்வதைப் புகைப்படம் எடுத்த பத்திரிகையாளர்கள் மீது அரசாங்கபடையினர் கடுமையாக கோபம் கொண்டுள்ளனர்.

றுவாண்டாவின் சனத்தொகை ஐம்பத்தாறு இலட்சமாகும். இத்தொகையில் 85 சதவீதமான மக்கள் பெரும்பான்மை ஹூட்டு இனத்தை சேர்ந்தவர்கள். எஞ்சிய 15 சதவீதமான மக்கள் சிறுபான்மை டுட்ஸி இனத்தைச் சேர்ந்தவர்கள். டுட்ஸி இனத்தவர்களில் பெரும்பாலானோர் இவ்இன ஒழிப்புநடவடிக்கைகள் காரணமாகஉயிரிழந்துள்ளனர்உயிரிழந்தவர்களின் சடலங்கள் ஆங்காங்கே சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. இவற்றை அடக்கம் செய்வதற்குக்கூட யாரும் இல்லை. அங்கு நிலவும் பீதியே இதற்குக் காரணம்.

றுவாண்டா ,புருண்டி ஆகிய இரு நாடுகளதும் ஜனாதிபதிகள் தன்ஸானியாவில் கடந்த ஏப்ரல் மாதம் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளில் கலந்துவிட்டு றுவாண்டாவின் தலைநகரான கிகாலியை நோக்கி திரும்பிக் கொண்டிருக்கையில் அவர்கள் பயணம் செய்த விமானம் மீது ராக்கட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதனால் அவ்விமானத்தில் பயணம் செய்த றுவாண்டா ஜனாதிபதி ஜூவெனல் ஹெபியரிமானா (57 வயது) புருண்டி ஜனாதிபதி சைப்பிரியன் எண்டார்யாமிரா (38 வயது) ஆகியோர் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இப் படுகொலை சம்பவத்தைத் தொடர்ந்து றுவாண்டாவில் இன ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.

# ஊழலை ஒழிப்பதற்கு நாம் நிரந்தரகமிசன் அமைப்போம்

- திருமதி சந்திரிகா

(கொழும்பு)

இலஞ்ச ஊழலை விசாரிக்க நாம் பதவிக்கு வந்ததும் நிரந்தர கமிஷன் அமைக்கப்படும். இவ்வாறு மேல் மாகாண முதல்வரும், சுதந்திரக் கட்சியின் பிரதித் தலைவருமான திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கா கூறியுள்ளார்.

அண்மையில் கட்சியின் தேசியக் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் கடந்த 17 வருடங்களாக நாடு பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது ... ந்து விட்டது. விவசாயிகளுக்கு விவசாய உபகரணங்கள், கிருமிநாசினிகள் மானியமாக வழங்கப்படுவதற்கும், விவசாய விருத்திக்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் எமது அரசு நடவடிக்கை எடுக்கும். அத்துடன் சிறுகைத்தொழில் துறையை ஊக்குவிக்க அந்நிய முதலீடுகளுக்கு அனுமதி வழங்கப்படுமெனவும்;எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் வெளியுறவுக் கொள்கை பேணப்படும் எனவும் தெரிவித்தார்.

தொகுதி அமைப்பாளர் நியமனம்;

## சுத. கட்சித் தொண்டர்கள் ஆட்சேபித்து முற்றுகை

சிறிலங்கா சுதந்திரக் ... உதவி பெறப்பட்டதாகவும்

## சிங்களவர்களின் நிலங்கள் அபகரிக்கப்பட்டு விட்டன

-அஸ்கிரிய பீடாதிபதி

(கொழும்பு)

மலை நாட்டு நிலங்களுக்கு உரிமையாளரான சிங்களவர்கள் இப்போது ஏழைகளாகி விட்டனர். ஆனால் சிறுபான்மையினர் சகல வளங்களும் பெற்று செழிப்போடு வாழ்கின்றனர். இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் பலிப்பான சந்தானந்த தேரோ கூறியுள்ளார்.

பௌத்த விகாரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில் சிங்களவர்களின் உன்னதமான வாழ்வுக்கு எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென தேர்தல் காலங்களில் முழக்கமிடும் அரசியல்வாதிகள் தேர்தலின் பின்னர் அவற்றை மறந்து விடுகின்றனர். ... முப்பது வருட குத்தகைக்கு வழங்கப்படுகினறது எனவும் குற்றம் சாட்டியுள்ளார்.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

### 1994 - 06 - 08

### புதன் இரவு

08.01- குயிலோசை
''மண்காக்கும் மைந்தர்''
08.20- ஏர்முனை
''தன்னிறைவுத் தானியங்கள்''
08.30- செய்திகள்
08.40- நாடகம்

தெரியவில்லை. அவ்வாறு சிந்திக்க வேண்டிய தேவையும் இருக்கவில்லை. கிடைத்ததை வேண்டிக்குவித்தல் என்ற ரீதியில், சீனாவிற்கும், தென்ஆபிரிக்காவிற்கும், ரஷ்யாவிற்கும் மாறிமாறி அதிகாரிகள் பறந்து கொண்டிருந்தனர்.

ஆனால் மறுவளமாக நிதி நெருக்கடியோ பெரிதாக வளர்ந்து கொண்டே சென்றது. முதலில் இவ்வருடத்திற்கென ஒதுக்கப்பட்ட நிதியையே திறைசேரி உடனடியாக ஒதுக்கீடு செய்ய முடியாத நிலையில் இருந்தது. உதாரணமாக கடற்படைத்தளபதி கப்பல்கள் கொள்வனவிற்கு சீனா சென்று பேச்சுவார்த்தை நடத்திய பின்னர் நிதியில்லை என எழுந்த பிரச்சினையால் பதவி விலகப் போவதாக கடற்படைத்தளபதி மிரட்டும் அளவிற்கு விவகாரம் சென்றது.

இதேசமயம் தேர்தலை நோக்கமாகக் கொண்டு டி.பி. விஜேதுங்கா விடுத்த சலுகைகள், வேலைவாய்ப்பு அறிவிப்புக்கள் என்பன பல நூறு கோடி ரூபா தேவையை அரசாங்கத்திற்கு ஏற்படுத்தியது. பல கோடிரூபா வருமான இழப்பையும் ஏற்படுத்தியது. ஏற்கனவே பெரும் நிதி நெருக்கடியில் திணறிக் கொண்டு இருந்த திறைசேரிக்கு இது மேலும் பெரும் சுமையை ஏற்படுத்தியது. அரச திணைக்களங்களின் தேவையையே திறைசேரியால் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்பட்டது பல திணைக்களங்களின் கோரிக்கைக்கு கைவிரிக்க வேண்டியும் வந்தது.

இந்நிலையில் தான் இராணுவம் மேலும் 1100 கோடி ரூபா தேவை என அவசர கோரிக்கை விடுத்தது. ஏற்கனவே தேசிய வருமானத்தில் சுமார் ஏழு வீதத்தை சிறிலங்கா இராணுவச் செலவீட்டிற்கென ஒதுக்கியிருந்தது. இதுவே மிகவும் உயர்ந்த பட்ச ஒதுக்கீடாகும். உலக நாடுகளின் சராசரி ஒதுக்கீடு 4.5 வீதமாகும். இன்று பொருளாதாரத்தில் வளர்ச்சியுற்ற நாடுகளே இராணுவச் செலவீட்டைக் குறைத்துக்கொண்டுவரும் இவ் வேளையில், மூன்றாம் உலக நாடுகளில் ஒன்றான சிறிலங்காவில் இவ்வாறு செலவுசெய்ய முற்பட்டமையானது தமது பொருளாதார நிலை குறித்து சரியான மதிப்பீடு இல்லாததன் விளைவே ஆகும்.

இதற்கு முக்கிய காரணி சிறிலங்கா ஆட்சியாளர்களின் இனவெறியே. அவர்களின் இனவாதச் சிந்தனையானது தன்னிலை மறக்கச் செய்துள்ளது. இது தமது விரலின் வீக்கத்தை அவர்களை உணரவைக்காமல் தடுத்துவிட்டது.

உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் கடந்த 17 வருடங்களாக நாடு பின்நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது நாட்டு உடைமைகளை இந்த அரசு பெறுமதியிலும் குறைந்த விலையில் வெளிநாட்டு கம்பனிகளுக்கு விற்பனை செய்கின்றது. இந்த ஆட்சியில் லஞ்ச ஊழல் தலைவிரித்தாடுகின்றது. படிப்பதற்கும், அறிவை வளர்ப்பதற்கும் இந்நாட்டில் இடமில்லை இந்த அரசால் சொல்லப்படும் பொருளாதார முன்னேற்றம் ஒரு சிலரிடம் மட்டுமே பணம் குவிவதற்குவழி கோலுகின்றது.

பொது மக்களின் நிவாரணம் வெட்டப்படுவதால் அவர்களின்வாழ்க்கைச்செலவு றொக்கட் வேகத்தில் உயர்

## ஆட்சேபித்து முற்றுகை

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் வீடு கட்சித் தொண்டர்களால் முற்றுகையிடப்பட்டதாகவும் பொலிசாரின் உதவியுடன் இவர்களை வெளியேற்ற வேண்டி வந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது;

நூறுக்கு மேற்பட்ட சுதந்திர கட்சி தொண்டர்கள் சிறிமாவோ பண்டார நாயக்காவின் வீட்டிற்கு சென்றதாகவும் இவர் தொண்டர்களை சந்திக்க முடியாது என தெரிவித்ததைத் தொடர்ந்து ஒரு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதெனவும் இதனைத் தொடர்ந்தே பொலிசாரின் உதவி பெறப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

தொகுதி தோறும் அமைக்கப்பட்ட அமைப்பாளர் நியமனம் தொடர்பாக ஆட்சேபம் தெரிவித்தே இவ் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் பழைய அமைப்பாளர்கள் இருக்கும் போது பல புதிய அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட்டதை இவர்கள் கண்டித்து உள்ளனர் எனவும் தெரியவருகிறது

களுத்துறை, புத்தளம், கம்பஹா, கொழும்பு ஆகிய மாவட்ட அமைப்பாளர் இவ்வாறு சிறிமாவோ பண்டார நாயக்கா வீட்டை முற்றுகையிட்டதாக தெரியவருகின்றது

தேர்தல் காலங்களில் முழக்கமிடும் அரசியல்வாதிகள் தேர்தலின் பின்னர் அவற்றை மறந்து விடுகின்றனர். அந்நியக் கம்பனிகளாலும், அந்நியர்களாலும் சிங்களவர்களிடமிருந்து அபகரிக்கப்பட்ட நிலங்களை மீண்டும் சிங்களவர்களுக்கு கிடைக்கச் செய்தவர் ஹெக்டர் கொப்பேகடுவ.

இந்த நிலங்களை ஐ.தே.க அரசாங்கம் மீண்டும் பிறநாட்டவர்களுக்கு குத்தகையில் கொடுத்து வருகின்றது. முன்னர் ஐந்து வருடக் குத்தகைக்கு வழங்கப்பட்ட தோட்டங்கள் இப்போது

கள்''
08.30- செய்திகள்
08.40- நாடகம்
''எதிரொலி,'

**1994 - 06 - 09**

**வியாழன் காலை**

07.02- மாவீரவணக்கம்
07.15- விடுதலை கீதங்கள்
07.30- செய்திகள்
07.35- பத்திரிகைச் செய்திகள்
07.40- விடுதலை கீதங்கள் தொடர்ச்சி.

# பொலநறுவ விவசாயிகள் பிரச்சினை விரைவில் தீர்வு காணப்படும்

**- கலாநிதி விக்கிரம வீரசூரிய**

(கொழும்பு)

பொலநறுவ மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் தொடர்பாக எதிரொலித்த பத்திரிகைகளுக்கு ஜனாதிபதியின் சிரேட்ட ஆலோசகர்களில் ஒருவரும், கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் செயலாளருமான விக்கிரம வீரசூரிய நன்றி தெரிவித்துள்ளார்.

பொலநறுவப் பகுதிக்கு அண்மையில் விஜயம் செய்த அவர் அங்கு பத்திரிகையாளர் மாநாடு ஒன்றை நடத்திய போது மேலும் கூறுகையில், பொலநறுவ மாவட்ட விவசாயிகள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக தற்போது தாம் பூரணமாக அறிந்து கொண்டிருப்பதாகவும் இதுபற்றி ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டு வந்து விரைவில் நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க இருப்பதாகவும் தெரிவித்தார். இத்தகவல்கள் வெரித்தாஸ் வானொலியின் சிங்கள சேவை மூலம் தெரியவருகிறது.

இம் மாவட்டத்தில் வங்கிக் கடன் பெற்ற விவசாயிகள் கடனை மீளச் செலுத்த முடியாமையால் தற்கொலை செய்து கொண்டதாகவும், இவ்வாறு சுமார் 16க்கும் மேற்பட்ட விவசாயிகள் பலியானதாக செய்தி வெளியாகியதும் தெரிந்ததே.

## தமிழர்களின் வயல்களில் சிங்களவர்கள் செய்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழர்களுக்குச் சொந்தமான பெருமளவு வயற்காணிகளில் தற்போது சிங்களவர்களும், முஸ்லீம்களும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தம்பலகாமம் பகுதியிலுள்ள நெல் வயல்களில் தமிழர்கள் பயிர்ச்செய்கையில் ஈடுபடக் கூடாதென சிறிலங்கா இராணுவத்தினர் எச்சரிக்கை விடுத்திருப்பது தெரிந்ததே இவ் வயல்களில் சிங்களவர்களும் முஸ்லிம்களும் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். இதே வேளை செய்கையில் ஈடுபட்டுள்ள சிறு அளவிலான தமிழ் விவசாயிகளும் கூட உரம், கிருமிநாசினி போன்றவற்றை பெறுவதில் பல சிரமங்களை அனுபவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

போதுமான நிதியுதவி இன்றேல்

## ஜெரிக்கோ பகுதிக்கு திரும்பப்போவதில்லை

**- யாசிர் அரபாத்**

(ருனிஸ்)

ஜெரிக்கோ மற்றும் காசாப் பகுதிகளை நிர்வகிப்பதற்கும் இப்பகுதிகளின் அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கும் போதுமான நிதியுதவிகள் கிடைக்காதவிடத்து தாம் ஜெரிக்கோப் பகுதிக்குத் திரும்பப் போவதில்லை என்று பாலத்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத் தெளிவாகக் கூறியுள்ளார்.

சி. பி. எல். தொலைக்காட்சிக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் சமாதான முயற்சிகளில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டிருப்பதையும் ஏற்றுக் கொண்டார். அத்துடன் ஈரானிய சார்பு ஹிஸ்புல்லா குழுவினர் மீது இஸ்ரேலிய விமானங்கள் தாக்குதல் நடத்தியதையும் இத்தாக்குதலில் 26 பேர் கொல்லப்பட்டதையும் அவர் வன்மையாகக் கண்டித்தார்.

## மத்திய அரசு ஒதுக்கும் நிதி மாநிலஅரசு துஷ்பிரயோகம்

**- தமிழக காங்கிரஸ் புகார்**

(சென்னை)

வறுமை ஒழிப்பு மற்றும் நலத் திட்டங்களுக்காக மத்திய அரசு ஒதுக்கும் நிதியை மாநில அரசு தவறாகச் செலவிடுகிறது. இதுபற்றி மத்திய அரசு விசாரணை நடாத்த வேண்டும். இவ்வாறு நேற்று முன்தினம் சென்னைக்கு வருகை தந்த மத்திய நிதியமைச்சர் டாக்டர் மன்மோகன்சிங்கிடம் தமிழக காங்கிரஸ் கமிட்டி கொடுத்துள்ள புகார் மனு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் தகவலை தமிழக காங்கிரஸ் கமிட்டியின் செய்தித் தொடர்பாளர் கி. க. கிள்ளிவளவன் தெரிவித்தார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இளைநூலகம்.

# கூரேக்கு வழங்கப்பட்ட ஆயுதம் குறித்து விசாரணை

(கொழும்பு)

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன கூரேக்கு 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வழங்கிய ஆயுதங்கள் தொடர்பாக பூர்வாங்க விசாரணை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக ''ராவய'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சர் கூரேக்கு 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ரி-56 ரக துப்பாக்கி மூன்றும் அதற்கான ரவைகளும் வழங்கப்பட்டதாகவும் ஒன்பது மில்லி மீட்டர் ரக கைத்துப்பாக்கி நான்கும் வேறு ரக துப்பாக்கிகளும் வழங்கப்பட்டதாகவும் இவை தொடர்பான விசாரணையே தற்போது மேற் கொள்ளப்பட இருப்பதாகவும் அப் பத்திரிகை மேலும் தெரிவிக்கின்றது.

# விவசாய அபிவிருத்தி சபை தலைவராக ஜனாப் அமிட்

ஐ. தே. க. வின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான எம். எச். அமிட் சிறிலங்கா லிபியா கூட்டு விவசாய மற்றும் விலங்கு அபிவிருத்திச் சபையின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட மேற்படி சபை விரைவில் சிறிலங்கா அரசுக்கு சொந்தமாக இருப்பதும், இ.ந் நிறுவனத்தின் சில பங்குகள் லிபிய அரசுக்குச் சொந்தமானவை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்

காமினி திசாநாயக்க பாராளுமன்றம் செல்வதற்கு வசதியாக ஜனாப் எம். எச். அமிட் பதவி துறந்தவர் என்பது தெரிந்ததே.

## யுத்தப்

சிறிலங்கா பாதுகாப்புப் படையினர் போன்ற படைப் பலமோ, ஆயுதபலமோ தமிழ்ப் போராளிகளிடம் இல்லாதபோதிலும் அவர்கள் தாம் எவ்வளவு சக்திவாய்ந்தவர்கள் என்பதை இதுவரை நிரூபித்து வந்துள்ளனர். போராளிகள் வசமுள்ள நிலப்பகுதி எவ்வளவு என்பது எவருக்கும் தெரியாது. அரச படையினர் தமது முகாம்களிலிருந்து முன்னேறி பின் மீண்டும் தமது முகாம்களுக்கே திரும்பிச் செல்வது இதை எடுத்துக்காட்டுகிறது. வரையறுக்கப்பட்ட வளங்களிலிருந்து எவ்வாறு அவர்களால் இத்தகைய சக்தியை பெறமுடிந்தது. இந்த மூலோபாயத்தை நாம் பெற்றுக் கொள்ளத் தவறிவிட்டோமா?

ஏனைய நாடுகளில் நடைபெறும் மோதல்கள் எவ்வாறு அரசுகளால் கையாளப்பட்டது என்பதை, உதாரணமாக தென்னாபிரிக்கா இஸ்ரேல், இந்தியா, பிரிட்டன் ஆகியநாடுகளில் எவ்வாறு இது மேற்கொள்ளப்பட்டது என்பதை ஆராய தேசிய பாதுகாப்பு மற்றும் சட்ட ஒழுங்கு குறித்த விசாரணைக்குழு ஒன்றை ஆரம்பிக்கவேண்டும்.

வளைகுடாப் போரின் போது அமெரிக்க இராணுவத் தலைமையின் கீழ் பலநேச நாட்டுப் படைகளின் இராணுவங்கள் செயற்பட முடியுமானால் எம்மால் இவ்

## உலர் உணவு விநியோகம்

தற்போது சித்திரை மாதத்துக்கான உலர் உணவு விநியோகம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதுவரை பெற்ற உலர் உணவுக்கானமுத்திரைப் புள்ளிகளைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஒப்படைத்தவர்கட்கு அடுத்த இரு கட்டங்களுக்கும் உலர் உணவுப் பொருட்களை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மேலதிக அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

## ராணுவத்துக்கு

போராட்டத்தை காட்டிக் கொடுத்தவர்கள் கொல்லப்பட்டனர் சிறிலங்கா அரசின் பொலிசார் மற்றும் புலனாய்வுத் துறையினர் அழிக்கப்பட்டனர் இரண்டாவது கட்டத்தில் பொலிஸ் நிலையங்கள், இராணுவ ரோந்து அணிகள் மீது தாக்கிவிட்டு தப்பும் நடவடிக்கைகளை புலிகள் கைக்கொண்டனர் மூன்றாவது பகுதியாக இது 1985-1986 ஆம் ஆண்டு காலப் பகுதியில்ஆரம்பித்தது அதாவது இராணுவ, பொலிஸ் படைகளை புலிகள் நேரடியாக எதிர்கொண்டு போரிட்டனர்

# விலைபேசி விற்பதற்கு - வெறும் சிலைகளல்ல பெண்ணினம்

# ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை உரிய நேரத்தில் அறிவிப்பேன்

-சிறிமாவோ பண்டாரநாயக்கா

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பது இப்போதைய பிரச்சினையல்ல. கட்சியின் பிரதித் தலைவராக சந்திரிகா குமாரணதுங்கா நியமிக்கப்பட்டிருக்கின்றார். பொருத்தமான நேரத்தில் பொருத்தமான முடிவை நான் எடுப்பேன். இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோபண்டாரநாயக்கா சண்டே ரைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் குறிப்பிட்டார்.

மருத்துவ சிகிச்சைக்காக அவர் திங்களன்று சிங்கப்பூர் பயணமாவதற்கு முன்பாக இப் பேட்டியை வழங்கினார். நான் இல்லாத வேளையில் சந்திரிகா கட்சித் தலைமையையேற்று எனது பணிகளை கவனிப்பார். நான் பிரசன்னமாக இருக்கும் போதும் கூட அவர் எனது சார்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வார். இதுவே எமது முடிவாகும் எனவும் அவர் தமது பேட்டியின்போது குறிப்பிட்டார்.

## வீரவணக்க கூட்டம்

(தொல்புரம்)

வலிகாமம் கோட்டம் சங்கானை வட்டத்தைச் சேர்ந்த ஆறாம் மாதங்களில் வீரச்சாவெய்திய மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8.00 மணியளவில் அராலி இந்துக் கல்லூரியில் நடைபெறும். இறுதியில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (41)

## பெயர்களை பதிவு செய்க

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களிலிருந்து அண்மைக் காலவன் செயல்களினால் பாதிக்கப்பட்டு தற்போது யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்திருக்கும் சகல பொதுமக்களும் மட்டு - அம்பாறை தொடர்பக செயலகத்திற்கு 15-06-94 இற்கு முன்பாக வந்து தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு தொடர்பக பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## துப்பாக்கி சூடு

(குருநகர்)

# மேல்மாகாண ஆட்சியை கவிழ்க்க காமினி முயற்சி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் மேல் மாகாண சபையின் ஆட்சியை கவிழ்த்து அதன் ஆட்சியை ஐ.தே.கவிடம் வழங்க காமினிதிசாநாயக்கா முன்னின்று செயற்பட்டு வருவதாக அரசாங்க கட்சியின் முக்கிய அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

சதித்திட்டம்மூலம்ஆட்சியை கைப்பற்ற வேண்டும் என்றும் அவ்வாறு இல்லாத நிலையில் மீண்டும் ஒரு தேர்தலை மேல் மாகாணசபை எதிர் நோக்குமாயின் அதில் பொதுஜன ஐக்கிய முன்னணி பெருவெற்றியையீட்டும் என்றும் இது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மேலும் சிக்கலை உருவாக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் இவ்வாறான ஒரு தேர்தலை சந்திரிகா குமாரணதுங்கா முகம் கொடுத்தால் அவரின் எதிர்கால அரசியல் மேலும் பிரகாசிக்கும் எனவும் அதன் பின்னர் நடைபெறும். ஜனாதிபதி தேர்தலில் மிகவும் இலகுவான வெற்றியை ஈட்டுவார் என்றும் எனவே இது குறித்து மிக அவதானமாக செயற்பட்டு ஆட்சியை கைப்பற்றுமாறுஐ.தே.க. பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர வேண்டுகோள் விடுத்துள்ளார் எனவும் தெரியவருகின்றது.

## யாழ்.சுகாதார சேவைகள் பணிப்பாளர்

# நிரந்தரமாக நியமிப்பதில் அமைச்சு அசமந்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவிக்கு நிரந்தரமான ஒருவரை நியமனம் செய்வதில் சுகாதார அமைச்சு அக்கறை காட்டாது இருந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பதவியில் இருந்த அதிகாரி இடமாற்றம் செய்யப்பட்டு பல மாதங்களாகியும் இப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்படாது அது வெற்றிடமாகவே இருந்து வருகிறது.

அண்மையில் கொழும்பு சென்ற சில அதிகாரிகள் இப்பதவிக்கு போட்டிபோட்டு வருவதாகவும் தெரியவந்துள்ளது.

எனினும் தற்போது சுகாதார அமைச்சு டாக்டர் விவேகானந்தனை தற்காலிகமாக நியமித்துள்ளதாகவும் இவருக்கான தற்காலிக நியமனக் கடிதம் விரைவில் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# தமிழ் இளைஞர்கள் ரெலோகுழுவால் கடத்தல்

(கொழும்பு)

கொழும்பில்இயங்கும் தமிழ் வளர்ச்சிக்கழக உறுப்பினர்கள் மூவர் ரெலோ குழுவால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர். சில நாட்களின் முன் இவர்கள் ஈ.பி.டி.பி. குழுவினராலும் கடத்தப்பட்டு 20 ஆயிரம் ரூபாபணம்பெறப்பட்டதுடன் தமிழ் வளர்ச்சிக்கழகம்தொடர்ந்து இயங்கக் கூடாது எனவும் எச்சரிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இடம் பெயர்ந்த சில தமிழ் இளைஞர்கள் இணைந்து கொழும்பில் இத்தமிழ் வளர்ச்சிக் கழகத்தை நிர்மாணித்திருந்தனர். இவர்கள் முத்தமிழ் விழா ஒன்றையும் நடத்த ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கென இவர்கள் சில தமிழ்க்குழுக்களின் பெயர்களைப் பாவித்து நிதி திரட்டியதாக கூறப்பட்ட போதிலும் அவர்கள் அதனை மறுத்துள்ளனர். இதன் காரணமாகவே இவர்கள்கடத்தப்பட்டதாகவும் மிரட்டப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இருநேர

கப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

நேற்றையதினம் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி தமது மாணவர்களூடாக பெற்றோரின் அபிப்பிராயத்தைத் திரட்டும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க கடந்த வாரம் வலயம் ஒன்றில் மாணவர்கள், பெற்றோர் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் காட்டிய கடும் ஆட்சேபத்தால் ஒரு நேரப் பாடசாலைகளாக இயங்குவதற்கு கல்விப் பணிப்பாளர் இணக்கம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (ச)

## விசக் கொடுத்த

பழுதடைந்திருந்ததைஅறிந்து புகார் கொடுத்தமையை அடுத்து இந் நான்குபேரும் இனம் காணப்பட்டனர்.

பின்னர் இவர்கள் சுகாதாரத் தொழிலாளர்கள் என்றும் விசக் கொடுத்த பழுதடைந்த இறைச்சியைத்தான் இவர்கள் விற்பனை செய்தார்கள் என்பதும் தெரியவந்தது.

இதனை அடுத்து இந் நான்கு பேரையும் வேலையில் இருந்து நீக்க சம்பந்தப்பட்ட பகுதியினர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகின்றது. (பா)

## ஆண்டு ஒன்று மாத இறுதிக்குள்

(கொழும்பு)

1995 ஆண்டு ஜனவரியில் பாடசாலைகளில் முதலாம் தரத்தில் பிள்ளைகளைச்

## சங்கீத

தொடர்பாக இருக்க வேண்டிய பொது விவேகத்தையும் பொருளாதாரஅறிவு சம்பந்தமான பொது விவேகத்தையும் மதிப்பிடக் கூடிய முறையில் தயாரிக்கப்பட்ட பொது வினாப்பத்திரமாகும்.

விடய (பாடம்) அறிவை மதிப்பீடு செய்யும் வினாப் பத்திரம் - 3 மணித்தியாலம். இது இருபகுதிகளைக் கொண்டது. பகுதி - 1 பல்தேர்வு வினாப்பத்திரம் - 1 மணித்தியாலம். பகுதி - 11 கட்டமைப்பும், கட்டுரை வகையான வினாப்பத்திரம் - 1 மணித்தியாலம். விண்ணப்பதாரிகள் தன்னால் கற்பிக்கும் முன்னுரிமைப்பாடம் சம்பந்தமாக இருக்கும் விசேட அறிவும், விவேகமும் க.பொ.த (உ. தரப்) பரீட்சையின் மட்

## அனுமதிக்கு விண்ணப்பிக்குக

வினாப்பத்திரம் ஒன்று தயார் செய்யப்படும்.

சேர்ப்பதற்காக இம்மாதம் 30ஆம்திகதிக்கு முன் விண்ணப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்

1995 ஜனவரி 31இல் ஐந்து வருடங்கள் பூர்த்தியான அல்லது 1990 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் பிறந்த பிள்ளைகளின் பெற்றோர்கள் சட்டரீதியான பாதுகாவலர்கள் தங்களது வதிவிடத்திற்குச் சமீபத்திலுள்ள பாடசாலைகளுக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பாடசாலைகளில் சேர்க்கப்படும் பிள்ளைகள் பற்றி எதிர்வரும் நவம்பர் மாதத்திற்கு முன் பெற்றோர்க்கு அறிவிக்கப்படும். இதன்படி 1995 இல் மட்டும் மூன்று லட்சம் பிள்ளைகள் புதிதாகச் சேர்வர் என நம்பப்படுகிறது

ரேச நாட்டுப் படைகளின் இராணுவங்கள் செயற்பட முடியுமானால் எம்மால் இவ்வாறு ஒரே தலைமையின் கீழ் ஏன் செயற்படமுடியாது? இத்தகைய ஓர் படைத் தலைமையை உருவாக்க ஜனாதிபதிக்கு முழு அதிகாரமும் உள்ளது என அச் செய்திக் கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


யாழ். ஸ்ரீதரில்

புரூஸ்லி நடித்த

GAME OF DEATH

தினசரி

பிற்பகல் 4.00மணி 6.00மணி

சனி, ஞாயிறு

காலை 10.30 மணி

பிற்பகல் 4.00 மணி 6.00மணி

(சி- 9570)


இராணுவ, பொலிஸ் படைகளை புலிகள் நேரடியாக எதிர்கொண்டு போரிட்டனர் பாதுகாப்புப்படையினரின் நிலைகளையும் நேரில் போரிட்டு அழித்தனர் இதன்போது அவர்கள் படையினரின் ஆயுதங்களை பெற்றுக் கொண்டது மட்டுமல்ல தமக்கு வேண்டிய பயிற்சிகளையும் பெற முடிந்தது.

புலிகளால் அர்ப்பணிப்புள்ள வீரர்களைக் கொண்ட ஒரு இராணுவத்தை இவ் வழிமுறைகள் மூலம் கட்டியெழுப்ப முடிந்தது அத்துடன் அவர்கள் தம்து கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலிருந்து புலனாய்வுத் தகவல்கள் பெருமளவில் வெளியேறுவதையும் சிறப்பாக கட்டுப்படுத்தியிருக்கின்றனர்.

விடுதலைப்புலிகள் தமது மூன்றாவது கட்டத்திலிருந்து நான்காவது கட்டமாக முழு அளவிலான சிவில் போரில் குதிக்கும் கட்டத்திற்கு இதுவரை நகரவில்லை இதற்கு அவர்களிடம் உள்ள படைப் பலம் குறைவும் ஒரு காரணமாக உள்ளது எனவும் அவர் மேலும் எழுதியுள்ளார்.

## துப்பாக்கி சூடு

(குருநகர்)

நேற்று முன்தினம் திங்கள் இரவு 7.30 மணியளவில் மண்டைதீவு மற்றும் அல்லைப்பிட்டி கரையோர சிறிலங்கா ராணுவக் காவலரண்களில் இருந்து யாழ். கரையோரப் பகுதிகளை நோக்கி கடும் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டது.

இதனை அடுத்து யாழ். பண்ணை, கொட்டடி, நாவாந்துறை, குருநகர் கரையோரப் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தவர்கள் தொழிலை கைவிட்டுக் கரை வந்து சேர்ந்தனர். (21)

## புளொட்டின்

மோட்டார் சைக்கிளில் வந்த தமது சகாவையும் விடுவித்து அழைத்துச் சென்றனர்.

எனினும் மறுநாளானசனிக்கிழமை அதிகாலையில் சம்பந்தப்பட்ட குழுவின் அலுவலகங்களை சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர். அதிகாலை மூன்று மணியளவில்நடந்த இச் சுற்றி வளைப்பின் போது குழுவின் பிரதேச முக்கியஸ்தர்கள் சிலரும் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவங்களையடுத்து புளொட் குழுவினர்களின் ஆயுதங்களை களைவதென சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது

## ரெலோ

பட்டிருந்த காட்டு மரங்கள் கைப்பற்றப்பட்டன. இது தொடர்பாக புளொட் குழு பொலிசாருக்கு தகவல் வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது. இதேசமயம் வவுனியாவில் தொடர்ந்து தமது கைதுசெய்யும் நடவடிக்கையை புளொட் மேற்கொள்கின்றது.

யும் இப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்படாது அது வெற்றிடமாகவே இருந்து வருகி

தம் விரைவில் அனுப்பி வைக்கப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னுரிமைப்பாடம் சம்பந்தமாக இருக்கும் விசேட அறிவும், விவேகமும் க.பொ.த (உ. தரப்) பரீட்சையின் மட்டத்திலான தரத்தையுடைய

மூன்று லட்சம் பிள்ளைகள் புதிதாகச் சேர்வர் என நம்பப்படுகிறது

# மேல்மாகாண சபையில் கடமை செய்வதில்லை

### ஐ. ஐ. தே. மு. உறுப்பினர் 8 பேர் முடிவு

[கொழும்பு]

மேல் மாகாண சபையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கு அக் கட்சி மாகாண சபை உறுப்பினர்களின் அவசர கூட்டம்ஒன்று நேற்று கூட்டப்பட்டதாகதெரியவருகின்றது.

வடமேல் மாகாண சபை முதல் அமைச்சர் ஜீ. எம். பிரேமச்சந்திர தலைமையில் இக்கூட்டம்கூட்டப்பட்டதாகவும் இதில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி உறுப்பினர்கள் இனிமேல் எந்த ஒரு கடமைகளையும் ஏற்கக் கூடாது என தீர் மானிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை தற்போது எழுந்துள்ள நிலைமை தொடர்பாக ஆராய்வதற்கு எதிர் வரும் சனிக்கிழமை காலை பத்து மணிக்கு கட்சியின் செயற்குழு கூட்டம் கூட்டப்படும் எனவும் அறிவிக்கப்படுகின்றது.

இக்கூட்டத்திற்கு மேல் மாகாண சபை உறுப்பினர்கள் பதினேழு பேரில் எட்டுப் பேர் மட்டுமே சமூக அளித்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

## விளக்கு

### வெளிவந்துள்ளது

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஆசிரியர் வாண்மை விருத்திக் குழுவால் திங்கள் தோறும் வெளியிடப்பட்டு வருகின்ற ''விளக்கு'' சஞ்சிகையின் மார்ச்-ஏப்ரல் இதழ் வெளிவந்துள்ளது. ''கற்றுக் கொண்டே இருப்போம்'' என்கிற ஆசிரியத் தலையங்கத்துடன் வெளிவந்துள்ள இந்த இதழ் ஆசிரியமும் வாண்மையும், விகிதம், பாடசாலைக் கட்டமைப்பில், ஆரம்பக்கல்வி போன்ற கட்டுரைகளுடனும் வேறு பல அம்சங்களுடனும் மலர்ந்துள்ளது.

## றாக்கிங்

இவர்கள் 'றாக்கிங்' என்ற போர்வையில் மேற் கொள்ளும் மிலேச்சத்தனமான செயல்களினால் மாணவ மாணவிகள் உடல் உள ரீதியாக பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு இவர்களது அழைப்பிற்கு இணங்க மறுக்கும் மாணவ, மாணவிகள் வீதிகளில் வைத்தே கடும் சொற்களால் இம்சிக்கப் படுவதாகவும் அறியவருகிறது

## அலெக்

ரொபட்சன் திருமதி ஹேமா பிரேமதாசாவை எம்.பியாக பதவிப் பிரமாணம் செய்ய ஜனாதிபதி விஜேதுங்கா முன் வந்தாலே தாம் தமது எம். பி பதவியை துறப்பேன் எனநிபந்தனைவிதித்திருந்தது தெரிந்ததே.


# உதவி ஆசிரியர்கள் தேவை

ஈழநாதம் பத்திரிகைக்கு உதவி ஆசிரியர்கள் தேவை. அனுபவசாலிகள், ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 20-06-94 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நேரில் வரவும். கல்விச் சான்றிதழ்கள், தகைமைச் சான்றிதழ்களையும் எடுத்துவரவும்.

சம்பளம் திறமை, அனுபவம் என்பனவற்றின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படும்.

முகவரி:-

31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.



# விற்பனைக்கு

கொழும்பு சிமெந்து, வாள்பிளேட்

யாவும் நியாய விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

C. M. சுகந்தினி
30), கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(8505)


# மரண அறிவித்தல்

## திருமதி

## பொன்னம்மா பரமசாமி

கட்டுடை.

கட்டுடையை பிறப்பிடமாகக் கொண்ட திருமதி பரமசாமி பொன்னம்மா (கண்மணி) 7-6-94 இல் சிவபதம் அடைந்துள்ளார். அன்னார் பரமசாமியின் அன்பு மனைவியும், சிவரெட்ணம் (ஓய்வு பெற்ற சுங்க இலாகா அதிகாரி அவுஸ்ரேலியா), நாகராஜா (ஓய்வு பெற்ற தபால் அதிபர் கொழும்பு), காலம் சென்ற இரட்ணம் கந்தையா, கந்தசாமி (ஓய்வு பெற்ற சுங்க இலாகா அதிகாரி கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி சீதாதேவி முருகையாவின் அன்பு தாயாரும், முருகையா (ஓய்வு பெற்ற பொலிஸ் அதிபர் மாலைதீவு) அன்பு மாமியாரும், றஜனி, உமாசுதன், சுதாகரன் (கொழும்பு), முகுந்தினி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியை 8-6-94 இன்று பிற்பகல் 3 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இருந்து பிப்பிலி மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்- இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சீதா
(மகள்)

வசந்த வாசா
கட்டுடை,
மானிப்பாய். (8506)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 08 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.